விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 23 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 12 திங்கட்கிழமை (27.12.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 008

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## ஐ.நா இனி நேரில் களமிறங்கும்



### அரசுக்கு கிரியெல்ல எச்சரிக்கை

(கொழும்பு)
"2022 மார்ச்சில் நடைபெற வுள்ள ஐ.நா மனித உரிமைகள் 15

## சிறுவனைக் கத்தியால் குத்தி தொலைபேசி அபகரிப்பு!

### தாவடியில் பயங்கரம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் வீதியில் பயணித்த சிறுவன் ஒருவனைக் கத்தியால் குத்தி, கைத்தொலைபேசி அபகரிக்கப்பட்டுள்ளது. 15

## 17 வருடங்களைக் கடந்தும் ஆறாத்துயரில் ஆழ்த்திய ஆழிப்பேரலை நினைவுகள்

### நாட்டின் பல இடங்களிலும் அனுஷ்டிப்பு



15ஆம் பக்கம் பார்க்க

### இலங்கை சிங்கள பௌத்த நாடு

# நாட்டை மீட்க இராணுவ ஆட்சி!

### வலியுறுத்துகின்றார் ஞானசார தேரர்



(கொழும்பு) நெருக்கடி நிலைமைகளிலிருந்து நாட்டினை மீட்க வேண்டுமென்றால் அடுத்த சில ஆண்டுகளுக்கு இராணுவத்திடம் நாட்டை ஒப்படைக்க வேண்டும் என "ஒரே நாடு ஒரு சட்டம்" தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு கிலோ அரிசி ரூ.200 ஆக உயரும்

### விவசாய நிபுணர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)
எதிர்வரும் ஆண்டில் ஒரு கிலோகிராம் அரிசி 200 ரூபாய் வரையில் உயர்வடையும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
எதிர்வரும் ஆண்டில் நாட்டில் உணவுப் பொருட்களுக்கான விலை 16

### எதிர்வரும் புதன் முதல்

## பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படும்

(கண்டி)
பேருந்து கட்டணங்கள் அடுத்த வாரம் அதிகரிக்கப்படும் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம உறுதிப்படுத்தியுள்ளார்.
கண்டி, அங்கும்புரவில் நேற்று 16

## கொரோனா 13 பேர் பலி

(கொழும்பு)
இலங்கையில் கொரோனாத் தொற்றுக்குள்ளான மேலும் 13 பேர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளதாக சுகாதார திணைக்களம் அறி 15

### வடக்கு இ.போ.சபையின் கணக்கிலுள்ள

## ரூ.15 கோடியை கடனாக வழங்குமாறு உத்தரவு

(கொழும்பு)
இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடமாகாணத்தில் உள்ள 7 சாலைகளுக்கும் சொந்தமான நிலையான வைப்பில் உள்ள 15 கோடி ரூபாய் நிதியை இன்று திங்கட்கிழமை மக்கள் வங்கியின் தலைமைக் காரியாலய கணக்கில் வைப்பிலிடுமாறு உத்தரவு பிறப் 16

## விபரீதங்கள்

### யாழிலிருந்து சென்றவர்கள் கௌதாரிமுனையில் மோதல்

இளைஞன் அடித்துக் கொலை

(கிளிநொச்சி)
கிளிநொச்சி - பூநகரி கௌதாரிமுனை பகுதியில் இளைஞர் ஒருவர் 15

### பட்டப்பகலில் குடும்பஸ்தர் வெட்டிப் படுகொலை

மன்னாரில் கொடூரம்

(மன்னார்)
மன்னார்- தலைமன்னார் பிரதான வீதி, ஓலைத்தொடுவாய் பகுதியில் 15

### விருந்துக்குச் சென்றவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

இளவாலையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் - இளவாலை சந்தியில் உள்ள காணிக் கிணற்றி 15

### வவுனியாவில் குளத்திலிருந்து இளைஞனின் சடலம் மீட்பு

(குருமன்காடு)
செட்டிகுளம், கலாசியம் பலாவ தம்பனைக் குளத்தில் சடலம் 15

### திருமணமாகி 11 மாதங்கள்; தீயில் எரிந்து பெண் மரணம்

கச்சாயில் சம்பவம்

(சாவகச்சேரி)
கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கச்சாய் தெற்கு கொடிகாமம் 15

### மூன்று பிள்ளைகளின் தாய் தலைவலியால் மரணம்

அச்சுவேலியில் சோகம்

(யாழ்ப்பாணம்)
தலைவலியினால் அவதியுற்று வந்த குடும்பப் பெண் ஒருவர் நேற்று 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் பொருளியல் பாட
ஆசிரியர் இ. பிரபாகரன் அவர்களின் தாயார்

அமரர்
## இளையதம்பி புஸ்பராணி



அவர்களுக்கு எமது கண்ணீர்ப் பூக்களை
காணிக்கையாக்கி ஆத்ம சாந்திக்காக
எம்பெருமானை வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் கழகம்
யா / வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை - யாழ்ப்பாணம்.
(C-3363)

---



# 45ஆம் நாள் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆங்கில பாட
ஆசிரியை திருமதி அனுஷீலா நிர்மலன்
அவர்களின் தந்தையார்

அமரர்
## சின்னத்தம்பி செல்வநாயகம்

அவர்கள் இறைபதம் அடைந்து
45 ஆம் நாள் நினைவு தினத்தில் அவரது ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஆசிரியர் கழகம்,
யா / வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை - யாழ்ப்பாணம்.
(C-3362)

---

# மரண அறிவித்தல்

தோற்றம்
12 - 05 - 1933



மறைவு
25 - 12 - 2021

## திருமதி பொன்னாச்சி ஐயாத்துரை

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் இல. 39, சோலை வன்னேரிக் குளத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் இல. 214/2, உதயநகர் மேற்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னாச்சி ஐயாத்துரை அவர்கள் நேற்று முன்தினம் (25.12.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஐயாத்துரை அவர்களின் அன்பு மனைவியும் கமலேஸ்வரி (குறிகாட்டுவான்), மனோன்மணி (ஓய்வுநிலை தொலைத் தொடர்பு சேவை முகவர்), சண்முகராசா (ஓய்வுபெற்ற ஆசிரியர்), இராஜேஸ்வரி (கிளிநொச்சி), குகானந்தராசா (ஓய்வுபெற்ற கோட்டக்கல்வி அலுவலர்), காலஞ்சென்ற முருகானந்தராசா (வவுனியா), சிவானந்தராசா (முள்ளியவளை) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, பொன்னுத்துரை, இராசையா, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கதிர்காமன் (குறிகாட்டுவான்), வைத்திலிங்கம் (கொழும்பு), நவரத்தினராசா (ஓம் சக்தி வாணிபம்), பாலாம்பிகை (ஓய்வுபெற்ற ஆசிரியர்), கமலாதேவி (ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் - கிளிநொச்சி வலயம்), செல்வமலர் (வவுனியா), சுகந்தி (ஆசிரியர் - முள்ளியவளை) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற காயத்திரி, நர்மதா, ரமணகுமார், டக்ஷாயினி, பிரணவி, சாம்பவி, பிரியங்கா, சுகிதா, பிரகாஸ், மிதுஷா, சுதன், தியோநந்தன், சனுசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அபினாஸ், பவீஷ்ணா, அக்ஷயன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (26.12.2021) ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் இடம்பெற்று பூதவுடல் திருநகர் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 214/2, உதயநகர் மேற்கு,
கிளிநொச்சி.
077 190 9296
தகவல் :-
(C-3359)

---

# பிரபல பின்னணிப் பாடகர் மாணிக்கவிநாயகம் நேற்றுக் காலமானார்

(டில்லி)

பிரபல தென்னிந்திய திரையிசைப் பாடகரும் பக்தியிசைப் பாடகரும் இசையமைப்பாளருமான மாணிக்கவிநாயகம் நேற்றுக் காலமானார்.

பல நூற்றுக்கணக்கான பக்திப் பாடல்களைப்பாடிய அவர், ஈழத்தமிழர்களால் வெளியிடப்பட்ட பக்திப் பாடல்கள் பலவற்றையும் பாடியுள்ளார்.

தென்னிந்திய திரைத்துறையில் "தில்" என்ற படத்தின் மூலம் அறிமுகமான அவர் எண்ணூறுக்கும் அதிகமான பாடல்களைப் பாடியுள்ளார்.

உயிரிழக்கும் போது அவருக்கு வயது 73 என்பது குறிப்பிடத்தக்கது.

(ஞா)

---

# யா / நல்லூர் மங்கையர்க்கரசியின் விழிநீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி ரஜிதா சுந்தரகுமார்
அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி சாந்தநாயகி வினாயகமூர்த்தி

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா / நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்.
(9257)

---



# 31ஆம் நாள் அஞ்சலி

எமது பாடசாலையின் கணித பாட
ஆசிரியை திருமதி அனுசியா தனசங்கர்
அவர்களின் தந்தையார்

அமரர்
## சின்னத்துரை உலகநாதன்

அவர்கள் இறைபதம் அடைந்து
31 ஆம் நாள் நினைவு தினத்தில் அவரது ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஆசிரியர் கழகம்,
யா / வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை - யாழ்ப்பாணம்.
(C-3361)

---

# கண்ணீரில் கரைந்த ஐந்தாண்டு

அன்னை மடியில்
08 . 05 . 1992



இறைவன் அடியில்
27 . 12 . 2016

## அமரர் செல்வி ஹம்சுஜா கணேசலிங்கம்

ஆண்டுகளைந்து ஆனதுவே யெம்மகளே
மாண்டு நீ மண் துறந்து விண்ணுற்று போயதுவும்
யாண்டுநாம் அரற்றி அழுதிடினும் விண்ணீங்கி
மாண்டார் வருவதுண்டோ மாநிலத்தே
ஏங்கும் எம்மனதோ உன்வதனங் கண்டிடவே
தாங்கும் திறனிழந்து தவிக்குதம்மா ஈரிதயம்
மீளாத்துயில் கொண்டு நீண்டவழி சென்றவளே
ஆறாத் துயருடனே உன் நினைவில் தவிக்கின்றோம்.

(C-3358)

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடமும் சைவ மாணவர் சபையும் இணைந்து நடத்திய மார்கழிப் பெருவிழாவின் இரண்டாம் நாள் நிகழ்வு நேற்று யாழ்.இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது. வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் முதல் அமர்வும் யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தலைமையில் இரண்டாவது அமர்வும் இடம்பெற்றது. இந் நிகழ்வில் சி.பிரதீபன் குழுவினர் மற்றும் ப.சிவமைந்தன் குழுவினரின் திருமுறைப் பாராயணம் இடம்பெற்றதுடன் கௌரவிப்பு நிகழ்வுகளும் இடம்பெற்றன.(படங்கள் : ரவிசாந், சிவசாந்தன்)

# நாடு வங்குரோத்து நிலையை அடைந்தால் 10 ஆண்டுகளுக்கு மீள முடியாது

## பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க



(கொழும்பு)

நாடு வங்குரோத்து நிலைமையை அடைந்தால் எதிர் வரும் 10 ஆண் டுகளுக்கு அந் நிலைமை யிலிருந்து மீள முடியாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக ரணவக்க தெரிவித்தார்.

கெட்டம்பே நாயக்க தேரரை சந்தித்து ஆசி பெற்றுக் கொண்ட போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பிரச்சினைகளுக்கு துரித தீர்வு காணப்படாவிட்டால் பஞ்சம் ஏற்படும். டொலர் தட்டுப்பாடு மற்றும் உரப் பிரச்சினையால் ஏற்பட்டுள்ள உணவு தட்டுப்பாடு என்பன அதில் தாக்கம் செலுத்தும். அதே போன்று மின்சாரம், எரிபொருள், மருந்து உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் டொலர் நெருக்கடி பாரிய தாக்கம் செலுத்தும். இன்றும் கூட எரிவாயு, எரிபொருள் மற்றும் நிலக்கரி என்பவற்றை இறக்குமதி செய்வதில் பாரிய சிக்கல் நிலவுகிறது.

ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் நீர் மின் உற்பத்தி பாதிக்கப்படுமாயின் , மின் விநியோகத்தடையும் தவிர்க்க முடியாததாகும். எரிபொருள் இறக்கு மதிக்கான விலைமனு கோரப்படுகின்ற போதிலும், அதற்கு எவரும் முன் வருவதில்லை. காரணம் இலங்கையின் வங்கி கட்டமைப்பின் மீது நம்பிக்கையற்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

தற்போதுள்ள நிலவரத்தின் அடிப்படையில் சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதால் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது. காரணம் 1987, 2009 மற்றும் 2017 இல் காணப்பட்டதை விட பாரதூரமான நிலைமையிலேயே நாடு தற்போதுள்ளது.

அண்மையில் வெளியிடப்பட்டுள்ள தரப்படுத்தல்களுக்கமைய வங்குரோத்து நிலைமையை அடைவதை தடுக்க முடியாத நிலைமையிலேயே நாம் காணப்படுகின்றோம்.

இவ்வாறான நிலையில் இலங்கையின் துறைமுகங்கள், விமான நிலையம் உள்ளிட்டவற்றை மிகக்குறைந்த விலையில் விற்பனை செய்வதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

இவற்றிலிருந்து மீள்வதற்கான பொதுவான வேலைத்திட்டமொன்றை ஜனவரியில் முன்வைப்பதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம். கட்சி பேதமின்றி அனைத்து தரப்பினரிடமும் பாராளுமன்றத்தில் இதனை சமர்ப்பிப்பதற்கு நாம் எதிர் பார்த்துள்ளோம் என தெரிவித்தார்.(4)

# எரிவாயு அடுப்பு வெடித்ததில் எரிந்து சாம்பலாகியது வீடு

(புத்தளம்)

புத்தளம் - கற்பிட்டி குறிஞ்சிப்பிட்டி வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு உட்பட்ட குரக்கான்சேனையில் சமையல் எரிவாயு அடுப்பு வெடித்ததில் வீடொன்று முழுமையாக எரிந்து நாசமாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



இச்சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளதாகவும் விபத்தினால் உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனவும் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருகையில், வீட்டில் வசித்து வந்த தாய் தேநீர் தயாரிப்பதற்காக எரிவாயு அடுப்பு ஊடாக நீரை சூடாக்கியுள்ளார்.


இதன்போது, குறித்த அடுப்பு திடீரென பாரிய சத்தத்துடன் வெடித்துச் சிதறியதுடன், வீடும் தீப்பற்ற ஆரம்பித்தது.

இதனையடுத்து, வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த அனைவரையும் வீட்டுக்கு வெளியே அழைத்து வந்த குறித்த தாய், வீடு முழுவதும் பரவிக்கொண்டிருந்த தீயை அணைப்பதற்கு அயலவர்களின் உதவியையும் நாடியுள்ளார்.

தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர எடுத்த முயற்சிகள் பலனளிக்காததால் குறித்த வீடு முழுமையாக தீயில் எரிந்தது.

இந்த விபத்து சம்பவம் தொடர்பில் கற்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4)

# சுனாமியில் உயிரிழந்தவர்களுக்கு பிரதமர் அஞ்சலி



(கொழும்பு)

சுனாமி பேரனர்த்தத்தில் 17 ஆண்டுகளுக்கு முன்னர் உயிரிழந்த இலங்கையர்களை நினைவுகூர்ந்து பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் அலரி மாளிகையில் விளக்கேற்றினார்.

சுனாமி அனர்த்தம் உள்ளிட்ட பல்வேறு அனர்த்தங்களில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் 'தேசிய பாதுகாப்பு தினம்' நேற்று அனுட்டிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் பிரதமர், பிரதமரின் பாரியார் மற்றும் இராணுவத்தினர், பொலிஸார் உள்ளிட்ட பாதுகாப்பு பிரிவின் உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கை கராத்தே தோ சம்மேளனத்தினால் கடந்த 18ஆம் திகதி அன்று கொழும்பு டொறின்ரனில் அமைந்துள்ள கராத்தே சம்மேளன உள்ளக அரங்கில் நடைபெற்ற தேசிய டிப்ளோமா தேர்வில் வடமாகாண கராத்தே சம்மேளன தலைவர் சென்சே சின்னத்துரை விஜயராஜ் 7 ஆவது கறுப்பு பட்டி பெற்றுள்ளார்.

## 2022 லெஜண்ட்ஸ் கிரிக்கெட்

# ஆசியா லயன்ஸ் அணியில் 6 இலங்கை வீரர்கள்

ஓய்வுபெற்ற சர்வதேச கிரிக்கெட் வீரர்களுக்கான தொழில்முறை கிரிக்கெட் தொடரான லெஜண்ட்ஸ் கிரிக்கெட் லீக்கானது அடுத்த வருடம் ஜனவரியில் ஓமனில் அமைந்துள்ள அல் அமெரத் கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

தொடக்கப் பதிப்பில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து மற்றும் பிற கிரிக்கெட் நாடுகளைச் சேர்ந்த முன்னாள் வீரர்கள் இந்தியா, ஆசியா லயன்ஸ் மற்றும் உலகின் பிற நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்று அணிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர்.

ஆசியா லயன்ஸ் அணி யில் சோயிப் அக்தர், ஷாஹித் அப்ரிடி, சனத் ஜெயசூர்யா, முத்தையா முரளிதரன், சமிந்த வாஸ், ரொமேஷ் கலுவிதாரண, திலகரத்ன டில்ஷான், அசார் மஹ்மூத், உபுல் தரங்கா, மிஸ்பா உல் ஹக், மொஹமட் ஹபீஸ், ஷோயிப் மாலிக், மொஹமட் யூசப், உமர் குல், யுனிஸ் கான் மற்றும் அஷ்கர் ஆப்கான் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.






இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளர் ரவி சாஸ்திரி இந்திய கிரிக்கெட் அணியில் பதவி வகித்ததைத் தொடர்ந்து கடந்த மாதம் இதன் ஆணையாளராக சேர்ந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (4)

# போட்டியின் நடுவே மாரடைப்பு கால்பந்து வீரர் மரணம்



வடக்கு ஆபிரிக்க நாடான அல்ஜீரியாவில் கால்பந்து போட்டியின் இடையே வீரர் ஒருவர் மாரடைப்பால் மரணமடைந்தது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அல்ஜீரியாவை சேர்ந்த 30 வயதான சோபியேன் லோவ்கர் எம் சி எஸ் கால்பந்து கிளப் அணிக்காக விளையாடி வந்தவர்.

இந்நிலையில், அல்ஜீரியன் லீக்-2 கால்பந்து தொடரின் இரண்டாவது பிரிவு ஆட்டம் நேற்று முன்தினம் ஓரான் கால்பந்து மைதானத்தில் நடைபெற்றது.

இந்த போட்டியின் முதல் பாதியில், சோபியேன் லோவ்கர் பந்தை துரத்தி ஓடிக் கொண்டிருந்த போது அவரது அணியை சேர்ந்த கோல் கீப்பர் மீது எதிர்பாராத விதமாக மோதினார்.

அதன் பின், அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு மீண்டும் தொடர்ந்து விளையாடினார். ஆனால், மீண்டும் விளையாட வந்த 10 நிமிடங்களிலேயே கீழே மயங்கி விழுந்தார்.

உடனே அவர் மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டார். ஆனால் செல்லும் வழியிலேயே மாரடைப்பால் மரணமடைந்தார். (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2479

### றொசாந்

நீயும் அந்த 2021 மாதிரி ஆயிடாதப்பா




சீ... சீ ... அவனாவது மார்ச் இல் தான் ஆரம்பிபச்சான்.. நான் ஜனவரி இலேயே ஆரம்பிச்சிடுவேன்

### ஜெனோசலா

மனிதர் உனர்ந்து கொள்ள இது மனித காதல் அல்ல



அதையும் தாண்டி உயரமானது

### அபிஷன்

ஆசிரியர் : உங்க பையன் ஆங்கிலத்தில் படு வீக்கா இருக்கான் சார்.

பையனின் தந்தை : தமிழிலே எப்படி இருக்கான்னு சொல்லுங்க சார்.

ஆசிரியர்: தங்கள் மகன் ஆங்கிலத்தில் மிகவும் வலுவலிழந்து இருக்கின்றான் ஐயா

பையனின் தந்தை :

### வேனுஷா



அவசரப்பட்டு எதிலும் தலையிடுவதற்கு முன்பு நமக்கு பின்னால் பொண்டாட்டி பிள்ளைகள் இருப்பதை நிச்சுப் பாருங்க இது படமல்ல பாடம்

### டிஷான்

ரங்க் கார்டை அப்பாவிடம் காமிக்கும் போது




என்னடா எல்லாம் F னு போட்டிருக்கு




ஓ, அதுவா F னா Fass, P னா Pail

### டேனுஜா

நானும் என் பிரண்ட்ஸ் உம் கனடா போற மாதிரி




ஒரு பட்டம் செய்து குடுங்க

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

27.12.2021
மார்கழி 12, திங்கட்கிழமை
அட்டமி பிற்பகல் 3.08 மணிவரை
அத்தம் பின்னிரவு 1.18 மணிவரை
சுபநேரம் 12.27-1.57 மணிவரை
இராகு காலம் -7.57-9.27 மணிவரை
சந்திராஷ்டமம்- சதயம், பூரட்டாதி

வளவன்


மேஷம்

நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சிகள் கைகூடும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், குடும்ப மகிழ்ச்சி மேலோங்கும்.


ரிஷபம்

பூர்வீக சொத்துக்களால் நன்மையுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள்.


மிதுனம்

தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், வழிபாட்டில் ஆனந்தம் காண வேண்டிய நாள்.


கடகம்

பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.


சிம்மம்

பேச்சில் இனிமை தென்படும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள்.


கன்னி

பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், கோரிக்கைகள் நிறைவேற கோவிலுக்கு செல்ல வேண்டிய நாள், சிந்தனை ஆற்றல்களால் சிறப்படைவீர்கள்.


துலாம்

ஒரு சில கோரிக்கைகளுக்காக சற்று அலைய நேரிடலாம், குடும்பத்தினரின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.


விருச்சிகம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், விருந்தினர் வருகையுண்டு, காரிய அனுகூலமுண்டு.


தனுசு

வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தூர தேசத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம், செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.


மகரம்

ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், பயணங்கள் கைகூடும்.


கும்பம்

மற்றவர்களிடம் பேசும்போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, புதிய முயற்சிகளை தள்ளிப்போடுவது நல்லது, விரயங்கள் கூடும், வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள்.


மீனம்

குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

நீ நீயாக இருக்கும் போது நீ மகிழ்ச்சியாக இருப்பாய்

# மக்களின் பிரச்சினைகளை மூடி மறைத்துவிட்டு குடிகார கலாசாரத்தை உருவாக்க எத்தனிப்பது ஏன்?

## அரசாங்கத்திடம் சோபித தேரர் கேள்வி

(கொழும்பு)

நாட்டு மக்கள் இன்று உணவு உட்கொள்ள முடியாத நிலையில் இருக்கின்றனர், பொருளாதாரம் சீர்குலைந்துள்ளது இவ்வாறான பின்னணியில் நிதி அமைச்சு மதுபான உற்பத்திசாலைகளை அமைக்க ஆர்வம் காட்டி வருகின்றது என ஓமல்பே சோபித தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

நாட்டின் சமூக சீரழிவுகளை ஏற்படுத் தக்கூடிய குடிகார காலாசாரமொன்றை உருவாக்கும் நோக்கிலா? அமைச்சரவை இந்த தீர்மானத்தை எடுக்கின்றது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அரசாங்கம் புதிதாக மூன்று மதுபான உற்பத்திசாலைகளுக்கு அனுமதி வழங்க தீர்மானித்துள்ளதாக அண்மையில் ஊடகங்களில் தகவல் வெளியிடப்பட்டிருந்தது.

நாட்டு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமல் அவற்றை மூடி மறைக்கும் நோக்கிலா? புதிய மதுபான உற்பத்திசாலைகளுக்கு அரசாங்கம் அனுமதி வழங்குகின்றது.

இவ்வாறு அனுமதி பத்திரம் வழங்குவதன் பின்னணியில் அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு என்ன ? மெய்யான மக்கள் பிரச்சினைகளை மூடி மறைக்கும் உத்தியா? என்ற சந்தேகம் எழுகின்றது என அவர் தெரிவித்தார். (4)

# நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு ராஜபக்ஷ அரசே பொறுப்பு

## ஐக்கிய தேசிய கட்சி



(கொழும்பு)

"நாட்டின் தற்போதைய பொருளாதார வீழ்ச்சிக்கு ஆட்சியிலுள்ள ராஜபகஷ் அரசே பொறுப்புக்கூற வேண்டும்." என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர்வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு கடந்த அரசே பிரதான காரணம் என அரசு தெரிவித்துவரும் குற்றச்சாட்டு தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "

"நாட்டின் பொருளாதாரம் பாரியளவில் வீழ்ச்சியடைந்திருக்கின்றது. இதிலிருந்து மீள்வதற்கு அரசிடம் எந்தத் திட்டமும் இல்லை. எனினும், வீழ்ச்சியடைந்து செல்லும் நாட்டைக் கட்டியெழுப்ப நாட்டின் பழைமையான, அனுபவமுள்ள கட்சி என்ற வகையில் 15 வருடங்களுக்கு மாற்ற முடியாத கொள்கைத் திட்டம் ஒன்றை அமைத்து வருகின்றோம். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலின் அடிப்படையிலேயே இது அமைக்கப்படுகின்றது.

நாட்டின் தற்போதைய பொருளாதார வீழ்ச்சிக்கு ஐக்கிய தேசியக் கட்சி உட்பட ஆட்சி செய்த அனைத்து அரசுகளும் பொறுப்புக்கூற வேண்டும் என அரசு தெரிவித்து வருகின்றது. இந்த நிலைமைக்கு நாங்கள் பொறுப்புக்கூற வேண்டியதில்லை.

2015இல் இருந்து 2019 வரை எமது அரசில் பொருளாதாரத்தை சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்து, எந்தப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு இல்லாமல் பாதுகாத்து வந்தோம். அதற்கான வேலைத் திட்டங்களை நாங்கள் அமைத்திருந்தோம். அதனால்தான் எம்மால் அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பை மேற்கொண்டு, எரிபொருள், எரிவாயு உட்பட அத்தியாவசியப் பொருட்களைத் தட்டுப்பாடு இல்லாமல் குறைந்த விலைக்குக் கொடுக்க முடிந்தது.

ஆனால், இந்த அரசு ஆட்சிக்கு வந்தது டன் எமது திட்டங்கள் அனைத்தையும் இல்லாமல் செய்து, அரசுடன் இருக்கும் வியாபாரிகளுக்குத் தேவையான மாதிரி பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்ய ஆரம்பித்தது. அதன் பெறுபேறே தற்போதைய பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணமாகும். அதனால் நாட்டின் தற்போதைய பொருளாதார வீழ்ச்சிக்கு ஆட்சியிலுள்ள ராஜபகஷ் அரசே பொறுப்புக் கூற வேண்டும்" - என தெரிவித்தார். (4)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



சிவலிங்கம்-சுதாகரன் (BA, SDO-PPD)
அகில இலங்கை சமாதான நீதவான் (JP)
16.12.2021 அன்று சமாதான நீதவானாக யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிறேம்சங்கர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டமையையிட்டு அவரை பாராட்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்
த.ஜெகசீலன்
Lukmee Exports Lanka co-pvt ltd Distributor
இலந்தைக்காடு, வல்வெட்டித்துறை.
(9252)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆழிப் பேரலையின் 17 ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று அனுஷ்டிப்பு


















(படங்கள்- ரவிசாந், சிவசாந்தன்,மகாலிங்கம், கஜிந்தன், ஜோசப்நயன், வசந்தரூபன்,தேவானந்தன், நெடுங்கீரன் )

# நிதி இருந்தும் அபிவிருத்தியில்லை பிரதேசசபை உறுப்பினர் ஆதங்கம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரில் மின் மயானம் அமைக்கும் விவகாரத்தில் நகரசபையின் நிலையான வைப்பில் நிதி இருக்க அதனை மறைத்து புலம்பெயர் உறவுகளிடம் உதவி கோரியது ஏன் என சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் க.தர்சன் கேள்வி எழுப்பியுள்ளார். அண்மையில் நகர சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்

அண்மையில் வசதி உள்ள சபைகளுக்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் மின் மயானம் அமைப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

அந்தவகையில் சாவகச்சேரி நகரசபைக்கும் அனுமதி கிடைத்தது. ஆனால் அனுமதி கிடைக்கப்பெற்ற போது நகரசபையின் நிலையான வங்கி வைப்பில் உள்ள நிதி சபைக்கு மறைக்கப்பட்டு சபையிடம் நிதி இல்லை என்ற போர்வையில் புலம்பெயர் உறவுகளிடம் உதவி கோரப்பட்டது.ஆனால் தற்போது நிலையான வைப்பில் உள்ள நிதியில் நகரில் கடைத்தொகுதி அமைப்பது தொடர்பாக ஆலோசிக்கப்படுகிறது.

நகரசபையிடம் மூன்று கோடிக்கு மேல் நிதி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் மின் மயானம் அமைக்க இரண்டு கோடி ரூபாய் போதுமானது. பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்கு அனுமதி கோரி அலைகிறோம். ஆனால் கிடைத்த அனுமதிக்கு எமது நிதியை பயன்படுத்தாமல் இழுத்தடிப்புச் செய்யப்படுகிறது.

சாதாரணமாக சடலத்தை எரியூட்டுவதற்கு ஏற்படும் விறகுச் செலவை விட மின்மயானத்தில் தகனமூட்டுவது மக்களுக்கு குறைந்த செலவையே கொடுக்கும். அபிவிருத்திக்கு யாரும் தடையாக இருக்காதீர்கள் என கேட்டுக் கொண்டார். (5-6-30)



திருநெல்வேலி சத்தியசாயி சேவா நிலையத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை கிறிஸ்மஸ் தின நிகழ்வுகள் நடைபெற்றன. (படம்- ரவிசாந்)

## பிரதேசசபை தவிசாளர் தெரிவு

(அராலி)

காரைநகர் பிரதேச சபையின் தவிசாளர் தெரிவு எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வர்த்தமானி அறிவித்தல் மூலம் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் நிறைஞ்சனினால் குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

தொடர்ந்து அடுத்தடுத்து வரவு-செலவுத்திட்டங்கள் தோற்கடிக்கப்பட்டதை அடுத்து புதிய தவிசாளர் தெரிவு எதிர்வரும் 30ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (5-6-104)



தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் 16 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணனின் ஏற்பாட்டில் யாழில் நேற்று முன்தினம் நடைபெற்றது. (படம்- ரவிசாந்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 350 | 360 | 400 |
| உருளைக்கிழங்கு | 160 | 160 | 150 | 180 |
| பச்சைமிளகாய் | 750 | 900 | 800 | 1000 |
| தக்காளி | 350 | 300 | 300 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 60 | 60 | 50 |
| கோவா | 280 | 320 | 360 | 400 |
| கரட் | 350 | 480 | 460 | 500 |
| பூசணி | 70 | 70 | 60 | 100 |
| புடோல் | 300 | 250 | -- | 350 |
| வாழைக்காய் | 70 | 70 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 230 | 200 | 150-250 | 320 |
| பெரிய வெங்காயம் | 240 | 240 | 240 | 250 |
| பாகற்காய் | 600 | 400 | 400 | 1000 |
| வெண்டிக்காய் | 220 | 200 | 180 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 110 | 150 |
| பயற்றங்காய் | 400 | 450 | 500 | 400 |
| லீக்ஸ் | 300 | 350 | 300 | 400 |
| பீற்றூட் | 250 | -- | -- | -- |
| கறிமிளகாய் | 600 | 700 | 750 | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | 1200 | -- |
| போஞ்சி | 350 | 320 | 380 | 450 |
| கத்தரிதம்புள்ள | 320 | 300 | -- | 350 |
| கீரை - 1 பிடி | 130 | 80 | 120 | 120 |
| தேசிக்காய் | 300 | 200 | 180 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 35-85 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 240 | 180 | 220 |
| வெங்காயப்பூ | -- | 450 | -- | -- |
| முள்ளங்கி | 200 | 200 | -- | 280 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 100 | 50 |
| வல்லாரை | 30 | 20 | 50 | 40 |
| ஈரப்பலா | 80 | 90 | 80 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டொலருக்கு பதிலாக தேயிலை ஈரானுடன் புதிய உடன்படிக்கை

(கொழும்பு)

இலங்கை கச்சாய் எண்ணெய் இறக்குமதிக்காக செலுத்த வேண்டிய 251 மில்லியன் டொலர் பணத்தை ஈடுசெய்யும் வகையில், ஈரான் இலங்கையுடன் தேயிலை ஏற்றுமதி உடன்படிக்கை ஒன்றுக்கு வந்துள்ளதாக ஈரான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஒரு வருடங்களுக்கு முன்னர் இறக்குமதி செய்த கச்சாய் எண்ணெய்க்காக இந்தக் கடனைச் செலுத்த வேண்டியிருந்தது.

ஈரானுக்கு எதிராக அமெரிக்கா பொருளாதார தடைகளை விதித்ததன் காரணமாக ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப பிரச்சினைகளால், இரு நாடுகளும் இந்தத் தீர்மானத்திற்கு வந்துள்ளதாக ஈரானின் பொருளாதாரம் மற்றும் வர்த்தக அபிவிருத்தி அமைச்சு ஊடகங்களிடம் கூறியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மற்றும் அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகள் காரணமாக ஈரான் வங்கிகளுடன் கொடுக்கல்-வாங்கலில் ஈடுபட ஏனைய நாடுகளில் வங்கிகளுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஈரானுக்குச் சொந்தமாக 5 பில்லியன் டொலர்கள் பிரித்தானியா மற்றும் அமெரிக்க வங்கிகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

ஈரான் மக்கள் அதிகமாக விரும்பும் பானமான தேநீருக்கான தேயிலையில் 50 வீதமான தொகையை இலங்கையே ஈரானுக்கு ஏற்றுமதி செய்கிறது. மேற்படி உடன்படிக்கையின் மூலம் ஈரான், இலங்கைக்கு எண்ணெய் ஏற்றுமதிசெய்ய டொலர்கள் தேவையில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (4)

# எரிவாயு அடுப்பு வெடிப்பை தடுக்கும் புதிய சாதனம்

## கல்முனை மாணவன் கண்டுபிடிப்பு




(கல்முனை)

கல்முனை கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலை மாணவர் ஒருவர் தற்போதைய எரிவாயு அடுப்பு வெடிப்பு சம்பவங்களுக்கு மிகவும் அவசியமான சாதனம் ஒன்றைக் கண்டு பிடித்துள்ளார்.

நாட்டில் பல பாகங்களிலும் எரிவாயு சிலிண்டர் வெடிப்புச் சம்பவங்கள் தொடர்ச்சியாக நடந்த வண்ணமே இருக்கின்றன.

இதனால் மக்களின் உயிர் மற்றும் பொருட்கள் சேதங்களுக்குள்ளாகி வருகின்றன.

இதற்குத் தீர்வாக அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனை கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலையில் தரம் 11 இல் கல்வி பயிலும் பாண்டிருப்பைச் சேர்ந்த லதேஸ் எனும் மாணவன் எரிவாயு சிலிண்டர் வெடிப்பு நடைபெறாமல் தடுப்பதற்காக Gas Safe Box எனும் புதிய கண்டுபிடிப்பொன்றை உருவாக்கியுள்ளார்.

எரிவாயுவின் சிலிண்டரிலிருந்து அதிக எரிவாயு கசிவு ஏற்படும் போது, எரிவாயு அடுப்புக்கள் வெடிக்கின்றன.

அடுப்பில் உள்ள Sensor மூலம் வெடிப்பதற்கு முன்னரே Gas Safety Box இல் உள்ள System ஆனது எரிவாயு கசிவைக் கட்டுப்படுத்துகின்றது.

இதன்மூலம், எரிவாயு அடுப்பு வெடிப்பதை தடுப்பது மட்டுமன்றி மேலதிகமாக கசிவில் உள்ள எரிவாயுவையும் மீதப்படுத்துகிறது.

எனவே, இதனால் எந்த வித சேதமுமின்றி பாதுகாப்பாகவும் பயமின்றியும் மக்கள் தங்களது சமையல்நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

# சதொசவில் அத்தியாவசியப் பொருட்கள் நிவாரண விலையில்

(கொழும்பு)

ஏனைய விற்பனை நிலையங்களை காட்டிலும் சதொச விற்பனை நிலையத்தில் அத்தியாவசிய உணவு பொருட்கள் நிவாரண அடிப்படையில் விநியோகிக்கப்படுவதாக வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

சதொச விற்பனை நிலையம் ஊடாக அரிசி , சீனி உள்ளிட்ட 8 அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய நிவாரணப் பொதி 1998 ரூபாயிற்கு விநியோகிக்கப்படுகின்றன.

நாளை முதல் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை ஒருவர் 130 ரூபாய் பெறுமதியிலான சம்பா அரிசியை 10 கிலோ கிராம் அடிப்படையில் பெற்றுக் கொள்ள முடியும்.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரண விலையில் அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்க அரசாங்கம் அதிக கவனம் செலுத்தியுள்ளது.

கடந்த காலங்களை காட்டிலும் தற்போது சதொச விற்பனை நிலையத்தின் சேவைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (4)

# விபத்து; ஒருவர் பலி

(கொழும்பு)

திஸ்ஸமஹாராம - பெரலிஹெல வீதியில் அவதானமற்ற வகையில் பயணித்த கெப் ரக வாகனம் மேலும் சில வாகனங்களுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் பலியாகியுள்ளார்.

குறித்த கெப் ரக வாகனம் இரண்டு முச்சக்கர வண்டிகள் மற்றும் உந்துருளி என்பவற்றுடன் மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வேகக்கட்டுப்பாட்டை இழந்த கெப் ரக வாகனம் வீதியோரம் நிறுத்தப்பட்டிருந்த முச்சக்கரவண்டி மற்றும் உந்துருளியுடன் மோதியுள்ளது.

விபத்தில் காயமடைந்த உந்துருளியின் சாரதி மற்றும் முச்சக்கர வண்டியில் இருந்த பெண் ஆகியோர் தெபரவெவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் உந்துருளியின் சாரதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இதனையடுத்து கெப் ரக வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (4)

# பேருந்து கட்டண திருத்த அறிக்கை நாளை கையளிப்பு



(கொழும்பு)

பேருந்து கட்டண திருத்தம் தொடர்பான அறிக்கை நாளை செவ்வாய்க் கிழமை போக்குவரத்து அமைச்சிடம் கையளிக்கப்படும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எரிபொருட்களின் விலை சடுதியாக அதிகரிக்கப்பட்டதை தொடர்ந்து கடந்த வாரம் பேருந்து கட்டணம் அதிகரிப்பு தொடர்பில் போக்குவரத்து இராஜாங்க அமைச்சருக்கும், தனியார் பேருந்து சங்க உரிமையாளர்களுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இதன்போது பேருந்து கட்டண திருத்தம் தொடர்பான கணிப்பீடுகளை மேற்கொள்ளுமாறு போக்குவரத்து அமைச்சினால் தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவிற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

அந்த ஆலோசனைக்கு அமைவாகவே பேருந்து கட்டண திருத்தம் தொடர்பான கணிப்பீடுகள் நாளை போக்குவரத்து அமைச்சிடம் கையளிக்கப்படவுள்ளது. (4)


# மரண அறிவித்தல்

## திருமதி. வீரவாகு கமலாதேவி (கமலம்)

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 10 | 25 |
| 03 | 12 |
| 1949 | 2021 |



வீமன்காமம் மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் இந்திரம்மன் கோவிலடி துன்னாலை மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட வீரவாகு கமலாதேவி (கமலம்) அவர்கள் 25.12.2021 சனிக்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமரேசு வீரவாகுவின் (முன்னாள் கட்டைவேலி நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளை முகாமையாளர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லத்துரை முத்தம்மாவின் மூத்தமகளும் சாந்தி (ஜேர்மனி), ஜெயந்தி (ஆசிரியர், தட்டாதெரு மெ.மி.த.க. பாடசாலை), அமரர் வீரகுமார் ஆகியோரின் தாயாரும்,

பாக்கியநாதன் (ஜேர்மனி), சிவகுமார் (Watcher- நெல்லியடி மத்திய கல்லூரி), அஜித்தா (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும்,

மாதினி (ஜேர்மனி), சாளினி (ஜேர்மனி), மாதுஷா (மாணவி, யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), சுகிர்தன் (ஜேர்மனி), சுஜித்தா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேத்தியாரும்,

அமரர் கனகரத்தினம் (வெள்ளை அண்ணா நுணாவில்), இந்திராதேவி (மாவிட்டபுரம்), யோகலிங்கம் (நோர்வே), பரராஜசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 25.12.2021 அன்று பிற்பகல் 1.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகள் தியான்காடு இந்து மயானத்தில் இடம்பெற்றது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு

சிவகுமார் ஜெயந்தி- 077 959 9476

பாக்கியநாதன் (ஜேர்மனி)

(C-3357)

தகவல்: குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பாரதம் / வெளிநாடு

### நத்தார் தினத்தன்று கோரம்

# பொதுமக்கள் பலரை கொன்று எரித்தது மியன்மார் இராணுவம்

(நைபியிடல்)

**நத்தார் தினமான நேற்று முன்தினம் சனிக்கிழமையன்று மியன்மார் இராணுவத்தினர் கிராம மக்களை சுற்றிவளைத்து 30 இற்கும் மேற்பட்டவர்களை சுட்டுக் கொன்றதுடன், உயிரிழந்தவர்களின் உடல்களுக்கு தீ வைத்து எரித்துள்ளனர்.**



இவ்வாறு பலியானவர்களில் பெரும்பாலானோர் பெண்களும் குழந்தைகள்/சிறுவர்கள் என்றும் கூறப்படுகிறது.

சம்பவத்தினால் ஐக்கிய அரபு இராச்சியத்தை தளமாகக் கொண்ட மனிதாபிமான குழுவின் இரு உறுப்பினர்களும் காணாமல் போயுள்ளதாக ஆதாரங்களை மேற்கோள் காட்டி சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மியன்மாரின் கிழக்கு



மோ சோ கிராமத்திலேயே இந்த சம்பவம் நடந்துள்ளது.

இந்த தாக்குதல் குறித்து ஒரு அறிக்கையில் உறுதிப்படுத்தியுள்ள சேவ் தி சில்ட்ரன் அமைப்பு, மனிதாபிமானப் பணிகளைச் செய்துவிட்டு வீடு நோக்கி பயணித்த இரண்டு ஊழியர்கள் சம்பவத்தின் பின்னர் காணாமல் போயுள்ளதாகவும் கூறியுள்ளது.


அதேநேரம் அவர்களின் தனிப்பட்ட வாகனம் தாக்கப்பட்டு எரிக்கப்பட்டதையும் அது உறுதிபடுத்தியுள்ளது.

நோபல் பரிசு பெற்ற ஆங் சான் சூகியின் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை ஏறக் குறைய 11 மாதங்களுக்கு முன்பு இராணுவம் கவிழ்த்ததில் இருந்து மியன்மார் கொந்தளிப்பில் உள்ளது. பாதுகாப்புப் படையினரின் ஒடுக்குமுறையில் 1,300 இற்கும் மேற்பட்ட பொது மக்கள் இதுவரை உயிரிழந்துள்ளதாகவும் உள்ளூர் கண்காணிப்புக் குழுக்கள் தெரிவித்துள்ளன. (4)

## உலகின் மிகப்பெரிய தொலைநோக்கியை விண்ணிற்கு அனுப்பியது நாசா

(வோஷிங்டன்)

அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா, ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் மற்றும் கனேடிய விண்வெளி நிறுவனம் இணைந்து உலகின் மிகப் பெரிய மற்றும் சக்திவாய்ந்த விண்வெளி அறிவியல் தொலைநோக்கியான 'ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி'யை உருவாக்கி உள்ளன.



பூமி தனித்துவமானதா? பூமியைப் போன்ற கிரக அமைப்புகள் இருக்கிறதா? பிரபஞ்சத்தில் நாம் மட்டும்தான் இருக்கிறோமா? போன்ற அடிப்படை கேள்விகளுக்கு பதில் தேடுவதற்கான ஆய்விற்கு, வானியலாளர்கள், விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் இந்த தொலைநோக்கியைப் பயன்படுத்த உள்ளனர்.

மிகவும் சக்திவாய்ந்த இந்த தொலைநோக்கியானது, தென் அமெரிக்க கண்டத்திலுள்ள ஏவுதளமான பிரெஞ்சு கயானாவில் இருந்து ஏரியன்-5 ராக்கெட் மூலம் நேற்று விண்ணில் செலுத்தப்பட்டது.

ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி, விண்வெளியில் வெற்றிகரமாக தனது பயணத்தை தொடர்வதாக நாசா கூறி உள்ளது.

இந்த தொலைநோக்கியால் நட்சத்திரங்கள் மற்றும் கிரக அமைப்புகள் எவ்வாறு உருவாகின மற்றும் அண்ட சராசரம் குறித்த விரிவான தகவல்களை சேகரிக்க முடியும். பிரபஞ்ச இரகசியம், தோற்றம் தொடர்பான பல புதிர்களுக்கான விடைகள் இந்த தொலைநோக்கி மூலமாக கிடைக்கும் என விஞ்ஞானிகள் நம்புகின்றனர். (4)

## தென்கொரியாவின் முன்னாள் ஜனாதிபதிக்கு பொதுமன்னிப்பு

(சியோல்)

தென் கொரியாவில் கடந்த 2012ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலில் அந் நாட்டின் முதல் பெண் ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டவர் பார்க் கியுன் ஹைஹ.

இவரது நெருங்கிய தோழியான சோய் சூன் சில், ஜனாதிபதியிடம் தனக்கு இருந்த செல்வாக்கை பயன்படுத்தி சாம்சங் உள்ளிட்ட பெரிய நிறுவனங்களிடம் இருந்து பல்லாயிரம் கோடி ரூபாய் நன்கொடையாக பெற்று ஊழலில் ஈடுபட்டார்.

இந்த ஊழலில் ஜனாதிபதி பார்க் கியுன் ஹைஹவுக்கு நேரடி பங்கு இருப்பதாக குற்றம் சாட்டப்பட்டது.



இதனால் ஜனாதிபதி பார்க் கியுன் ஹைஹவுக்கு எதிராக நாட்டில் போராட்டம் வெடித்தது.பார்க் கியுன் ஹைஹ மீதான ஊழல் வழக்கில் அவருக்கு 22 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து அந்நாட்டு சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பளித்தது.

இந்நிலையில், ஊழல் வழக்கில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி பார்க்கியுன் ஹைஹவுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. (4)

## ஒமிக்ரோன் பரவலால் 6000 விமானசேவைகள் ரத்து

(ஜொகன்னஸ்பேர்க்)

உருமாறிய கொரோனா வைரசான ஒமிக்ரோன் முதன் முதலில் தென் ஆபிரிக்காவில் கண்டறியப்பட்டது. இதுவரை 110இற்கும் மேற்பட்ட நாடுகளில் பரவி உள்ளது. குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் ஒமிக்ரோன் வைரஸ் மிகவும் வேகமாக பரவி வருகிறது.

புத்தாண்டு கொண்டாட்டத்தையொட்டி பலர் வெளி நாடுகளுக்கு செல்வார்கள் என்பதால் வைரஸ் பரவல் மேலும் அதிகரித்து விடும் என்று பல நாடுகள் அச்சம் தெரிவித்துள்ளன.

எனவே பல நாடுகள் கடந்த சில நாட்களாக விமான சேவையினை ரத்து செய்துள்ளன. அந்த வகையில் நேற்று காலைவரை 6000 விமானசேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. (4)

## இங்கிலாந்து நாட்டில் 10 இல் ஒருவருக்கு கொவிட்



(லண்டன்)

இங்கிலாந்தில் ஒமிக்ரோன் வைரஸ் பரவல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தொற்றாளர் எண்ணிக்கை நேற்று முன் தினம் 1 இலட்சத்து 22 ஆயிரத்து 186 ஆக உயர்ந் துள்ளது.

நேற்றைய பாதிப்பும் 1 இலட்சத்துக்கும் அதிகமாக உள்ளது. அதேபோல் கொரோனாவால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கையும் அதிகமாக உள்ளது.கடந்த 16 ஆம் திகதி 20 பேரில் ஒருவருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டது. இது படிப் படியாக அதிகரித்து தற்போது 10இல் ஒருவருக்கு கொரோனா பாதிப்பு இருப்பது தெரிய வந்துள்ளது. இதையடுத்து கொரோனா பரவலை தடுக்க அந் நாட்டில் கட்டுப்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.விமான நிலையங்களிலும் தீவிர கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.(4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வீதி அபிவிருத்திப் பணிகளின் போது

# உரிய சமிக்ஞைகள் இன்மையால் விபத்துக்குள்ளாகும் மக்கள்

(குருமன்காடு)

வவுனியாவில் இடம்பெற்று வரும் வீதி அபிவிருத்தி பணிகளில் வீதி சமிக்ஞைகளை காட்சிப்படுத்தாமையினால் வீதியில் வெட்டப்பட்ட குழியில் விழுந்து இளைஞரொருவர் படுகாயமடைந்துள்ளார்.

வவுனியா, பெரியதம்பனை, பண்டிவிரிச்சான் வீதி புனரமைப்பு பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில் குறித்த வீதியில் பாலங்கள் அமைப்பதற்காக வீதியில் குழிகள் வெட்டப்பட்டுள்ள நிலையில் அவை தொடர்பில் பயணிகளுக்கு தெளிவூட்டும் சமிக்ஞைகள் காட்சிப் படுத்தப்படவில்லை.

இரவு வேளைகளில் அவ் இடங்களில் ஒளிரக்கூடிய சமிக்ஞைகளும் காணப்படவில்லை.

இதன் காரணமாக அவ் வீதியால் பயணிப்போர் சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு அவ் வீதியில் வெட்டப்பட்டிருந்த குழியில் விழுந்து இளைஞரொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இதேவேளை, வீதி அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடும் பல இடங்களிலும் இவ்வாறு சமிக்ஞைகள் காட்சிப்படுத்தப்படாதுள்ளமை தொடர்பில் மக்களால் வீதி அபிவிருத்தி அதிகார சபையினருக்கு தெரிவித்தும் எவ்விதப் பலனும் கிடைக்கவில்லை எனவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

எனவே, இவை தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் கவனம் செலுத்த வேண்டும் எனவும் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-6-250-299)

# தன்னிறைவான நாட்டைக் கட்டியெழுப்புவது கிராமங்களின் கைகளிலேயே உள்ளது

## வவுனியா பிரதேச செயலர் தெரிவிப்பு

(நெளுக்குளம்)

கொவிட் நிலைமையுடன் சேர்ந்து பொருளாதாரமும் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளது. எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பது தெரியாத ஒரு சூழ்நிலையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என வவுனியா பிரதேச செயலர் நா.கமலதாசன் தெரிவித்தார்.

வவுனியா மருக்காரம்பளை கிராம உத்தியோகத்தர் பிரிவில் சௌபாக்கியா நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

பொருளாதாரக் கொள்கைகளை மறுசீரமைத்து முன்னேற்றப் பாதையில் செல்ல முயற்சித்துக்கொண்டி ருக்கும் சந்தர்ப்பத்தில் அரசு தன்னிறைவான கிராமங்களுக்கு அதிகளவான நிதியினை வழங்குகிறது.

பன்னிரெண்டு வருடங்களாக பிரதேச செயலாளராகக் கடமையாற்றி வருகிறேன். அந்தவகையில் பல வாழ்வாதார உதவிகளை எமது திணைக்களங்களின் ஊடாக வழங்கி வருகிறோம். எனினும் நாம் எதிர்பார்த்த அபிவிருத்தி எட்டப்பட்டதா என்பது பாரிய கேள்விக்குறியாகவே உள்ளது.

எமது நோக்கமும் அரசாங்கத்தின் நோக்கமும் மக்களின் அபிவிருத்தியே. தற்போது கொவிட் நிலைமையுடன் சேர்ந்து பொருளாதாரமும் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளது.

எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பது தெரியாத ஒரு சூழ்நிலையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

பொருளாதாரக் கொள்கைகளை மறுசீரமைத்து முன்னேற்றப் பாதையில் செல்ல நாம் முயற்சித்துக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அரசாங்கம் தன்னிறைவான கிராமங்களுக்கு அதிகளவான நிதியினை வழங்குகிறது. அந்த நிதியைச் சரியாக பயன்படுத்த வேண்டும்.

இன்று உரப்பிரச்சினை, கிருமி நாசினிப் பிரச்சினை எனப் பல பிரச்சினைகளுக்கு மத்தியில் மக்கள் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

எதிர்காலத்தில் வெளிநாடுகளில் நாம் கையேந்தப் போகின்றோமா? தன்னிறைவான நாட்டைக் கட்டியெழுப்ப போகின்றோமா? என்பது நகரங்களில் இல்லை கிராமங்களிலேயே தங்கியுள்ளது என அவர் தெரிவித்தார். (5-299)



அரசாங்கத்தின் சப்ரிகம வேலைத்திட்டத்தின் கீழ் வவுனியா சகாயமாதாபுரம் கிராமத்தில் அமைக்கப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் திட்டத்தை பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் அண் மையில் திறந்து வைத்தார்.

(படம்: வசந்தரூபன்)

# உவர் நிலங்களாகும் விவசாய நிலங்கள் தடுத்து நிறுத்துமாறு பொதுமக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் வன்னேரிக்குளமும் அதனையண்டிய பகுதிகளும் உவராகி வருவதால் மக்கள் குடிபெயரும் நிலை ஏற்பட்டுள்ளது எனவும் இவற்றைப் பாதுகாப்பதற்கு நிதிகளை ஒதுக்கி நிலைபேறான அபிவிருத்திகளை முன்னெடுக்குமாறு கிராம மக்கள் வலியுறுத்துகின்றனர்.

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள வன்னேரிக் குளத்தையண்டி 495 இற்கு மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 1700 இற்கும் மேற்பட்டோர் தற்போது வாழ்ந்து வருகின்றனர்.

நாட்டில் ஏற்பட்ட போர்ச்சூழல் காரணமாக இக்கிராமங்களை அண்டிய உவர்நீர்த் தடுப்பணைகள் சேதமடைந்ததால் உவர்நீர் உட்புகுந்து வளமான பயிர்ச் செய்கை நிலங்கள் உவர் நிலங்களாக மாறியுள்ளன. இதனால் இங்குள்ள மக்கள் வேறு இடங்களிற்கு குடிபெயர்ந்துள்ளனர்.

உவர் நீர்த்தடுப்பணைகள் அழிவடைந்ததால் கடற்பெருக்கு காலங்களில் விவசாய நிலங்களில் உவர்நீர் பரவிக் காணப்படுகின்றது.

தற்போது 1600 ஏக்கருக்கும் மேற்பட்ட வளமான பயிர்ச் செய்கை நிலங்கள் உவர் நிலங்களாக மாறியுள்ளன. எனவே வளமான நீண்ட வரலாற்றைக் கொண்ட வன்னேரிக்குளத்தையும் அதனையண்டிய கிராமங்களையும் பாதுகாக்கும் வகையில் நிதியை ஒதுக்கி நிலைபேறான அபிவிருத்திகளை மேற்கொள்ளுமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-315)

# தமிழர்களின் கலை வரலாற்றில் புலிகளின் காலம் பொற்காலம்

(கிளிநொச்சி)

தமிழர்களின் கலை வரலாற்றில் தமிழீழ விடுதலைப் புலிகளின் காலம் பொற்காலம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

கலாலயத்தின் வெளியீடான விழுதொலிகள் இறுவெட்டினை வெளியிட்டு வைத்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், போர் முடிந்ததன் பின்னரான காலப்பகுதியில் கலைஞர்கள் தங்களின் படைப்புக்களுக்கு உரித்தான அந்தஸ்து கிடைப்பதில்லை என்பதான ஒரு குற்றச்சாட்டு கலைஞர்களால் முன்வைக்கப்பட்டது.

உண்மைதான் எம்மவர்கள் இந்த மண்ணில் இருந்த போது கலைகளையும் கலைஞர்களையும் வளர்க்க விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகம் என்ற பிரிவு உருவாக்கப்பட்டு அதனூடாக பாரம்பரிய கலைகளையும் பண்பாட்டையும் வளர்த்தார்கள்.

தமிழர்களின் கலை வரலாற்றில் தமிழீழ விடுதலைப் புலிகளின் காலமே பொற்காலம் ஆகும்.

கலைஞர்களும் தமிழர்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஆற்றிய பங்கும் மகத்தானது. தங்களின் கலைப் படைப்புக்களால் போராட்டத்தின் பக்கம் மக்களை எழுச்சி கொள்ள வைத்தவர்கள் என்றால் மிகையில்லை. கலைஞர்களும் இந்த மண்ணில் மீளும் சிறப்பாக உரிய அந்தஸ்தோடு வாழும் காலம் உருவாக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (5-6)



வீதி விபத்துக்களை தடுக்கும் வகையில் கிளிநொச்சி மாவட்ட செயலகம் மற்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் ஆகியன இணைந்து கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தலைமையில் நேற்று விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுத்தன.

(படம்: யது பாஸ்கரன்)

# 'வவுனியம்' நூல் வெளியீட்டு விழா

(நெளுக்குளம்)

வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் வவுனியா பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் இணைந்து நடத்தும் வவுனியம் நூல் வெளியீட்டு விழா நாளை 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

வவுனியா மாவட்ட பிரதேச செயலாளர் நா. கமலதாசன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர் கலாநிதி த.மங்களேஸ்வரன் கலந்து கொள்வார். (5-299)

# மனிதம் உள்ள மனிதர்களால் இன்னமும் இயங்கு நிலையில் உலகம்



(தருமபுரம்)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தருமபுரம் பகுதியில் வசிக்கும் விவசாயி ஒருவர் ஒவ்வொரு ஆண்டும் தனது வயலில் விளையும் நெல்லை தனது பிரதேசத்தில் உள்ள பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களுக்கு வழங்கி வருகின்றமை வழமையாகும்.

அந்தவகையில் இம் முறை நத்தார் தினத்தை முன்னிட்டு பொருளாதாரத்தில் பின்தங்கிய சில குடும்பங்களுக்கு உணவுப் பொருட்களும் சிறு தொகை பணமும் வழங்கியுள்ளார். (4-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த ஆண்டு நாட்டில் கடுமையான மின் தடங்கல்

(கொழும்பு)

இலங்கை அடுத்த ஆண்டு கடுமையான மின்சார விநியோக தடங்கலை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்போது திட்டமிட்ட மின்சார விநியோக தடைகளை நாடு சந்திக்க வேண்டியிருக்கும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

மின்சார உற்பத்திக்கான உலை எண்ணெய் இறக்குமதியை மேற்கொள்வதற்கான டொலர்களுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுகிறது.

இந்த நிலையில் நுரைச்சோலை அனல் மின்சார மையத்தின் பழுதுப் பார்த்தல் செயற்பாடுகள் இன்னும் முடிவடையவில்லை.

இந்த பழுதுப்பார்த்தலுக்காக சீனாவின் உதவியை நாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக மின்சார மைய தரப்புக்கள் தெரிவித்துள்ளன.

எனவே ஜனவரி மாதத்தில் பெரும்பாலும் இரவு நேரங்களில் மின்சார விநியோகத் தடை நடைமுறைப்படுத்தப்படலாம் என்று மின்சார சபையின் தரப்புக்களை கோடிட்டு கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. (4)

# தொழிற்சங்க நடவடிக்கை பிற்போடப்பட்டது

(கொழும்பு)

தொடரூந்து நிலைய அதிபர்களின் தொழிற்சங்க நடவடிக்கை இன்று வரை பிற்போடப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் நேற்று நள்ளிரவு முதல் அனைத்து விதமான செயற் பாடுகளிலிருந்தும் விலகி, தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கப்போவதாக தொடரூந்து நிலைய அதிபர்கள் சங்கம் முன்னர் அறிவித்திருந்தது.

இந்நிலையில், தொழிற்சங்க நடவடிக்கை இன்று காலை 10 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக மேற் படி சங்கம் அறிவித்துள் ளது.

தொடரூந்து திணைக் கள அதிகாரிகளுடன் இன்று இடம் பெறவுள்ள கலந்துரையாடலின் பின்னர் இறுதி அறிவிப்பு வெளியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# புலனாய்வு உத்தியோகத்தர்கள் மீசை, தாடி வளர்க்கத்தடை?

(கொழும்பு)

புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்கள் மீசை மற்றும் தாடியுடன் பணியில் ஈடுபடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

அரச புலனாய்வு, பயங்கரவாத விசாரணை மற்றும் போதைப்பொருள் தடுப்பு போன்ற பொலிஸ் பிரிவுகளில் கடமையாற்றி வரும் அதிகா ரிகள் எதிர் வரும் காலங்களில் தாடி, மீசை அல்லது முடி வளர்க் கவோ அனுமதி அளிக்கப்படாது.

தாடி, மீசை, தலை மயிர் என்பனவற்றை சீராக வெட்டி, சீருடையில் கடமைக்கு சமூகமளிக்குமாறு புலனாய்வுப் பிரிவிற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.(4)

# வாகன விபத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த ஐவர் படுகாயம்

(கொழும்பு)

கட்டான - தெல்கஸ் சந்திக்கு அருகில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை மற்றும் அவர்களது இரண்டு பிள்ளைகள் ஆகியோர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நத்தார் பண்டிகையை முன்னிட்டு தேவாலயத்திற்கு சென்று உந்துருளியில் மீள வீடு திரும்பியவேளை, கார் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த 8 மற்றும் 12 வயதுகளை உடைய இரண்டு சிறுவர்களும் மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு ரிஜ்வே சீமாட்டி சிறுவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் காயமடைந்த தந்தை மற்றும் கார் சாரதி ஆகியோர் நீர்கொழும்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (4)

# களம் பதித்த கல்விப் பேராசான்

## அமரர் மயில்வாகனம்

### மறைந்தார் மாண்பு



மல்லாவி மகாவித்தியாலயம் வரை முன்னை நாள் அதிபராக இருந்த அமரர்.செ. மயில்வாகனம் அமரத்துவம் அடைந்து இருபத்தெட்டு வருடங்கள் ஒடினும் இன்று மல்லாவி மயில் வாகனம் தமிழ் வித்தியாலயம் என்னும் ஒலிக் கீற்றில் பரிணமித்துக் கொண்டிருக்கிறது.

அன்னாரின் அகவை தொண்ணூற்றெட்டைத் தொட்டுத் தொட்டு நிற்கும் வேளையிலே அகரத்தைச் சுழிய விட்டு வளர்த்த கல்வி சுவடுகளை மறக்க முடியுமா? தமிழற்குத் தொண்டு செய்தோன் தரணியில் செத்த துண்டோ? என்னும் ஓர் அறிஞர் கூற்று உண்டு. உயிரோட்டமாக உயிர் உள்ளவரை பிரகாசிக்கும் அல்லவா மனிதப் பிறவியிலே தக்கதாக வாழ்பவன் வானுறையும் தெய்வத்திற்கு ஒப்பானவன் என்ற வள்ளுவன் குறல் வழியே அதிபர் செல்லையா மயில்வாகனம் சொல்லிற்கு இலக்கணமாக வாழ்ந்து வழி காட்டியவர் என்றால் மிகையாகாது. அன்னார் அமரத்துவம் அடைந்து இருபத்தெட்டு வருடங்கள் ஒடினும் கல்வியின் வளங்களை உருவாக்கி உரமிட்டு எமை வளர்த்த கல்விச் சுவடுகளை என்றுமே நினைவு கூருவோமாக. 27.12.1921ஆம்ஆண்டு அன்னாரின் 98 ஆவது அகவையை நினைந்து போற்றுவோமாக.

அன்னாரின் ஆசிரியத்துவம், ஆளுமை, கடமை, கண்ணியம், தன்னலமற்ற தியாகங்கள் எல்லாம் எமக்கு புத்துயிர் ஊட்டி கல்வியின் உச்சிக்கே எமையெல்லாம் அழைத்துச் சென்றது. இன்று பல்துறையிலும் சேவையிலே மிளிர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

எளிமையான தோற்றம் ஆசானுக்கு பொருந்திய வேஷ்டி, நைசனல் தாங்கிய கம்பீர உடை ஆன்மீகம் குழைந்த உள்ளம் முத்தமிழ் பொதிந்த சுரங்கம் மாணவர் உள்ளங்களில் அறிவை பசுமரத் தாணியாக பதியச் செய்யும் பக்குவம் இவைகளே இவரிடம் நிறைந்த செல்வங்களாகும்.

மட்டுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியில் கல்வி பயின்று திருநெல்வேலி முத்துத்தம்பி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சியையும் நிறைவு செய்தார். பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் மாணாக்கனுமாவார். மத்துகம மத்திய கல்லூரியிலே 1947 ஆம் ஆண்டு ஆசிரியர் சேவையை தொடங்கினார். பின்னர் மலையகத்தில் றாகலை அ.த.க பாடசாலையில் உப அதிபராகவும் கடமையாற்றினார். அதன் பின்னர் வன்னி மாவட்டத்தில் கல்விளான் குளம் அ.த.க பாடசாலையிலே 1960 ஆம் ஆண்டு அதிபராக கடமையாற்றினார். போக்குவரத்திற்குப் பாதைகள் கஷ்டமான பிரதேசமாக இருந்தது. எனினும் மூன்று ஆசிரியர்களுடன் கல்வி வளர்ச்சி வளர்க்க அயராது பாடுபட்டார். பேச்சுப் போட்டிகள், சமயப் போட்டிகளில் எல்லா மாணவர்கள் முதலிடங்களைப் பெற ஊக்குவித்தார். கைவினைப் [illegible] களாக தும்புத்தடி கட்[illegible] புல்லில் பன்னவேலைகளையும் பயிற்றுவித்தார். கிராம கைத்தொழிலாக பாய் நெசவு தொழிலும் வளர்ச்சி கண்டது. மக்கள் மனதெல்லாம் நிறைந்த தொண்டனாகப் போற்றப்பட்டார். அன்னாரது சேவையும் சமூகப் பற்றும் கல்விளான் மக்களை ஈர்த்தது. அத்தருணத்தில் 01.01.1967 தொடக்கம் மல்லாவி அ.த.க பாடசாலைக்கு அதிபராக இடமாற்றம் கிடைத்தது. இவ்வேளை கல்விளான் மக்களும் மனதும் கண்கள் நீர் சொரிய மல்லாவிக்கு விடை பெற்றார்.

கொட்டிலில் தவழ்ந்த பாடசாலை மல்லாவி அ.த.க பாடசாலையாக உருவெடுத்தது. நான்காவது அதிபராகக் கடமையேற்றார். முள்ளும் புதரும் நீக்கி பெற்றோர்களின் சிரமதானங்களுடன் பாடசாலை வளாகத்தை ஒளிர வைத்தார். பாடசாலை தினவரவு ஒழுக்காற்று முறைகள் கையாளப்பட்டன. ஆசிரியர்கள் மூவருடன் நால்வராகச் செயற்பட்டார்.

மாணவர்கட்கு ஆக்கத்துடனும் ஊக்கத்துடனும் அறிவைப்புகட்டினார். உறுதி மிக்களத்திலே உன்னத இலட்சிய வேட்கை கொண்டு பாடசாலை வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டார். மாணவர்களின் வளர்ச்சி மேம்பாடு கண்டது. பாடசாலைக்கு வளங்களும் வளர்ச்சியும் பெருக பாடசாலை அபிவிருத்திச் சங்கம் இணைந்தது. மாணவர் தொகை அதிகரித்தது. வகுப் [illegible] இருந்தது.

கல்விப் பணிமனைகளை நாடி 25 ஏக்கர் நிலம் பாடசாலைக்கு வழங்கப்பட்டது. பாடசாலை மண்டபங்கள் ஆசிரிய விடுதிகள் என அரசினரால் கட்டப்பட்டது. உயர் அதிகாரிகளின் ஒத்தாசையைப் பெறுவதில் வல்லவர் என்றே கூற வேண்டும். விஞ்ஞான கூடம், மனையியற் கூடம் நூல் நிலையம் என நாமங்களுடன் பாடசாலை துலங்கியது.

ஆசிரியர் பற்றாக்குறை நிவர்த்தியாக்க அயராது பாடுபட்டவர். விளையாட்டுத்துறை இசைத்துறை என ஆசிரியர்கள் பிரகாசித்தனர்.

29.10.82 இல் அன்னாரின் இலட்சியமாக மல்லாவி மகாவித்தியாலயமாக உயர்வு கண்டது. அந்தப் பிராந்தியத்திற்கு வரப் பிரசாதமாக அமைந்தது. மணிமகுடமாகத் திகழ்ந்தது. இப் பாடசாலையும் கிராம மக்களும் பெற்றோரும் மாணவர்களும் பெரும் பேற்றினைப் பெற்றார்கள். தன்னலமற்ற சேவையாளனும் பண்பாளருமான செல்லையா மயில்வாகனம் கால் பதித்த காலம் பொற்காலம் என்றே கூற வேண்டும். கவிதைகள் சிறுகதைகள் "குகன்" என்ற புனை பெயரில் இடம் பெற்றது. வவுனிக் குளம் சிவ புரத்தீசன் மீது ஊஞ்சற்பா அருளினார்.

சேவையின் கால ஓட்டத்திலே 31.12.1983இல் அன்னார் சேவை ஓய்வு நிலை பெற்றார். தன்னலம் கருதாத சேவை செந்தமிழின் ஆற்றல், தொழிலே தெய்வம், அன்பு, பண்பு, பொறுமை, தியாகம் அத்தனையும் எம் மல்லாவி மண்ணிற்குத் தந்த அழியாச்சுவடுகளாகும். மகாவித்தியாலயம் மத்திய கல்லூரியாக உயர்ந்து நிற்கிறது.

13.8.1993 இல் அன்று அவர் இறைபதம் எய்தினார். அன்னாரின் நினைவாக பாடசாலையில் மயில்வாகன மண்டபம் என நாமம் சூட்டப்பட்டது.

இன்று மல்லாவிப் பழைய மாணவர், சங்கத்தினரால் சிறுவர் பாடசாலைக்கு, "மயில்வாகனம் தமிழ் வித்தியாலயம்" என்ற நாமத்துடன் கல்வியை வளத்துக் கொண்டிருக்கின்றது.

தமிழிற்கு தொண்டு செய் தோன்

தரணியில் மறைந்தது ண்டோ

காலத்தை வென்ற மாமனிதருள் அன்னாரும் ஒருவரே.

**சிவலிங்கம் கமலாவதி**
**விசுவமடு, கிளிநொச்சி,**
**மல்லாவி மகாவித்தியாலயம்**
**பழைய மாணவி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுப் பஞ்சத்தை எதிர்கொள்ள வீட்டுத் தோட்டத்தில் ஈடுபடுங்கள்

## காலம் கடந்தபின் ஞானம் பிறந்தது பந்துலவிற்கு

(கொழும்பு)

**எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் தமது வீட்டுத் தோட்டங்களில் ஏதாவது காய்கறிகளைப் பயிரிட்டு கொள்ளுமாறு வர்த்தக அமைச்சர் பந்துலகுணவர்தன பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

உணவு பொருட்களின் விலை அதிகரிப்பு சம்பந்தமாக செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

அனைத்து வீடுகளிலும் மிளகாய் செடிகள், கத்தரிக்காய் செடிகள், பசளை கீரை போன்றவற்றை பயிரிடுங்கள். அவற்றை குறுகிய காலத்தில் பயன்பாட்டுக்கு எடுக்க முடியும்.

துரித பயிர் செய்கை குறித்த யோசனையை நாங்கள் முன்வைத்துள்ளோம். ஜனவரி மாதம் முதல் வீட்டுத் தோட்டங்களில் ஏதாவது ஒன்றை பயிரிட்டு கொள்ளுங்கள்.

இரண்டாம உலகப் போர் நடந்த காலத்திலும் மிகப் பாரிய உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டது எனவும் அமைச்சர் சுட்டிக் காட்டினார். (4)

# இறக்குமதிகள் மேலும் வரையறுக்கப்படும்

(கொழும்பு)

இறக்குமதிகளை மேலும் வரையறுத்துக் கொள்ளுமாறு இலங்கை மத்திய வங்கி, நிதி அமைச்சிற்கு பரிந்துரை செய்துள்ளது.

டொலர் கையிருப்பினை தக்க வைத்துக் கொள்வதற்காக இவ்வாறு பல்வேறு பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டு முதலீடுகளை கூடுதலாக பெற்றுக்கொள்ளல், ஏற்றுமதி வருமானத்தை அதிகரித்துக் கொள்ளல், உள்ளிட்ட பல்வேறு யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் அமைச்சரவையில் கலந்துரையாடி தீர்மானம் எடுக்கப்பட வேண்டுமென நிதி அமைச்சிடம், மத்திய வங்கி அறிவித்துள்ளது.

மத்திய வங்கியின் மொத்த டொலர் கையிருப்பு 1.5 பில்லியன் டொலர்கள் எனவும் இதில் 330 மில்லியன் டொலர் தங்கக் கையிருப்பு எனவும் அண்மையில் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

# புதிய அரசியலமைப்புக்கான வரைபு ஜனவரியில் ஜனாதிபதியிடம்

(கொழும்பு)

புதிய அரசியலமைப்புக்கான நிபுணர்கள் குழுவின் வரைபு எதிர்வரும் ஜனவரி மாத இறுதிக்குள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடத்தில் கையளிக்கப்படவுள்ளது.

புதிய அரசியலமைப்புக்கான வரைபொன்றை தயாரிப்பதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தலைமையில் ஒன்பது பேர் கொண்ட குழுவை கடந்த ஆண்டின் செப்டெம்பர் 2ஆம் திகதி நியமித்திருந்தார்.

இடையில் இந்தக் குழுவிற்கான பதவிக்கால எல்லை நீடிக்கப்பட்ட நிலையில் தற்போது அக் குழு இறுதி செய்துள்ள புதிய அரசியலமைப்புக்கான வரைபினை ஜனாதிபதியிடம் கையளிக்கத் திட்டமிட்டுள்ளது.

எனினும் இந்த குழுவினால் தயாரிக்கப்பட்ட வரைபில் முக்கிய விடயங்கள் தொடர்பில் இன்னமும் அதன் அங்கத்துவர்களிடையே இறுதியானதும் உறுதியானதுமான நிலைப்பாடுகள் எட்டப்படவில்லை என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக, நாட்டின் தன்மை, அதிகாரப் பகிர்வு உள்ளிட்ட முக்கிய விடயங்கள் தொடர்பில் நிபுணர்கள் குழு நெருக்கடிகளைச் சந்தித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (4)

# முட்டை, கோழிகளுக்கான விலை அதிகரிப்பு

(கொழும்பு)

கால்நடைகளுக்கான தீவனத்தை இறக்குமதி செய்ய முடியாத தன் காரணமாக சந்தையில் முட்டை மற்றும் கோழி என்பவற்றுக்கான விலைகள் அதிகரித்துள்ளதாக அகில இலங்கை கோழிப்பண்ணை சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் கடுமையான டொலர் தட்டுப்பாடு காரணமாக கால்நடை தீவனத்தை இறக்குமதி செய்வதில் சிரமங்களை எதிர்நோக்குவதாக அச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

கால்நடைத் தீவனத்தை இறக்குமதி செய்வதற்கு கோழிப்பண்ணை உற்பத்தியாளர்களுக்கு அரசாங்கம் சில சலுகைகளை வழங்கினால், உற்பத்தியை அதிகரிக்க முடியும்.

இதன் விளைவாக முட்டை மற்றும் கோழியின் விலைகள் குறையும் என்று அகில இலங்கை கோழிப்பண்ணை சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர சுட்டிக்காட்டினார். (4)

# இன்று ஒரு தகவல்

## எண்ணம் ஏன் தான் எப்படியோ போகிறதோ?

ஒவ்வொருவர் மனத்திலும் சில வக்கிரமான எண்ணங்கள் தவறான ஆசைகள் குடிகொண்டிருக்கும். அவற்றை மனம் என்னும் நிலத்தினில் வளர்த்துவிட்ட களைகளாக எண்ணி களைய வேண்டுமே தவிர உரமிட்டு வளர்க்க எண்ணக்கூடாது.

தவறான எண்ணங்கள் உணர்வுகளைத் தூண்டிவிடும் போது மனத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் மனச்சாட்சிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். நற்பெயர் நல்லுறவு ஆகியவற்றைக் காட்டிலும் நாம் சம்பாதிக்க வேண்டியது இவ்வுலகில் என்ன இருக்க முடியும்?

ஒரு தவறான செயலை எண்ணத் தூண்டும் போது இதைச் செய்வதைத் தவிர வேறு வழியே இல்லையா? என்ற கேள்வியை மனப்பூர்வமாக எழுப்பி விடை காண முயல வேண்டும்.

மாற்று வழியும் வேற்று வழியும் இல்லாமல் போகாது. தவறான செயல்களால் கிடைக்கக்கூடிய இன்பத்தை விட நியாயமான வழியில் கிடைக்கக்கூடிய துன்பம் இனிமையானது.

தகாத வழியில் கிடைத்த இன்பமானது உள்ளுக்குள்ளே இருந்து கொண்டு நெஞ்சைச் சுட்டெரிக்கும் இந்த வேதனை வேண்டத்தகாதது.

எந்த ஒரு முடிவை எடுக்கும் போதும் மனம் போன போக்கிற்கு விட்டு விடாமல் அறிவுப் பூர்வமாகச் சிந்திக்க வேண்டும்.

பின்னால் வரப்போகும் விளைவுகளை எண்ணிப் பார்த்த பிறகே எதிலும் இறங்க வேண்டும்.

சில நிமிட இன்பத்திற்காக யுகம் யுகமாகத் துன்பத்தை அனுபவிக்க முயலும் முட்டாள்தனத்திற்கு முடிவு கட்ட வேண்டும்.

நாம் செய்யும் தவறுகள் மற்றவர்களைப் பாதிப்பதாக இருக்கக்கூடாது என்பதில் நாம் அக்கறையாக இருக்க வேண்டும்.

நாம் செய்யும் நற்செயல்களை இந்த உலகம் எப்போதும் எண்ணிக்கொண்டிருப்பதில்லை. ஆனால் நாம் செய்யும் தவறுகளை மறப்பதில்லை மன்னிப்பதும் இல்லை.

மனிதனது மூளை ஒரு நல்ல தோட்டம் போன்றது. அதில் அழகு கூட்டும் மலர்களை நல்லெண்ணங்களை வளர்க்கலாம். புல்லையும் பூண்டையும் காட்டுச் செடியையும் கண்டவற்றையும் வளர்க்கத் தான் வேண்டுமா?

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## நீதி தவறாத மன்னன்



அவனது செயல்களில் அவனுக்குக் கவனம் இல்லை. தந்தையிடம் அவன் வைத்திருந்த அன்பு, அவனை அந்த நிலைக்கு ஆளாக்கிவிட்டது.

இரண்டாம் மகன், தனக்கு அரசியலில் பங்கு கிடைத்த நாள் முதலாக ஆடம்பர வாழ்க்கையை மேற்கொண்டொழுகி வந்தான்.

நன்றாக உடை உடுத்துவது, சுவை மிக்கவற்றையே உண்பது, இன்பமாகப் பொழுது போக்குவது ஆகியவற்றில் தன் கவனத்தை முழுமையாகச் செலுத்திக் கொண்டிருந்தான்.

மூன்றாம் மகனுக்குத் தந்தையின் மறைவு அதிர்ச்சியைக் கொடுத்தது. ஆனாலும், "தந்தைக்குப் பின் அவரது பெயர் கெடாத வகையில் நாட்டைப் பொறுப்புடன்ஆள வேண்டுமே. மூத்த அண்ணன் இதனையறியாமல் துயரத்தில் மூழ்கியிருக்கிறான்.

இரண்டாம்அண்ணன் கடமைகளை மறந்து, உலக இன்பங்களில் மூழ்கிக் காலங்கழிக்கிறான். எல்லாப் பொறுப்புக்களும் என்னைச் சார்ந்துவிட்டன. மக்களின் நலம் கருதி செங்கோல் செலுத்தும்திறனை இறைவன் எனக்கு அளித்தருள்வானாக.

இவன் தந்தை இவனைப்பெறுவதற்கு என்ன தவம்செய்தானோ என்று உலகம் சொல்லுமாறு நடந்து கொள்வதுதான், மகன் தந்தைக்குச் செய்யத்தக்க கடமையாகும். அந்தக் கடமையைச் செய்ய நல்ல மன வலிமையையும், ஆற்றலையும் நான் பெறுவது எவ்வாறு?" என்று எண்ணி எண்ணி அமைச்சர் களுடன் கலந்தாலோசித்துத் திட்டமிட்டு அரசியல் அலுவல்களை ஒழுங்காகக் கவனித்து வந்தான்.

அவ்வாறு இருந்து வந்த மூன்று பிள்ளைகளின் நிலைமைகளையும், அக்கிழவனிடம் விளக்கமாக எடுத்துக் கூறினர். அவற்றைக் கேட்டறிந்த அக்கிழவன் வேறு எவனும் அல்லன், பழைய மன்னவனாகிய தந்தைதான். அம்மன்னவன் திட்டமிட்டு அவ்வாறு செயல் புரிந்தான்.

தான் இறந்த பிறகு என்ன நடக்கும்என்பதை அறியவேண்டி, தான் இறந்துவிட்டதாகக் கூறுமாறு தன்னுடன் வந்தவர்களிடம் கூறி, அவர்களை முன்னதாக அனுப்பி வைத்தான். அவர்களும் திரும்பி வந்து அவ்வாறே செய்தனர். பின்னர் மன்னவனே கிழக் கோலத்தில் வந்து, தன் புதல்வர்களின்நிலைமைகளைக் கேட்டறிந்தார்.


அப்போது மன்னவனுக்குத் தன்மீது உண்மையான அன்புள்ளமகன் எவன் என்பது நன்கு விளங்கிவிட்டது.

மன்னன் உடனே அரண்மனைக்குச் சென்றான். தான் பழைய மன்னன் என்பதை வெளிப்படுத்தினான். எல்லோரும் அவனை பெரு மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

அவன் அரண்மனையில் சில நாட்கள் தங்கியிருந்து, தன் மூன் றாம் புதல்வனாகிய இளைய மகனே ஆளுதல் வேண்டும் என்று முடிவு செய்து, அவனுக்கு முடி சூட்டினான். இளைய மகனுக்கு முடி சூட்டிய பின்னர், மன்னன் மன அமைதியோடு காசிக்குச் சென்றான். அங்கே தங்கித் தன் இறுதி நாட்களைக் கழித்தான்.

(முற்றும்)

# மகாபாரதம்




ஈஸ்வரன்- அவர்கள், முற்பிறவியில் கல்வியினால் கர்வம் அடைந்திருப்பர். தங்கள் கல்விப் பெருமையால் பிறரை அலட்சியம் செய்திருப்பர். இகழ்ந்திருப்பர். அத்தகையோர் இப்பிறவியில் கிடைத்தற்கரிய மனிதப் பிறவி வாய்த்தும் கல்வி அறிவு இன்றிக் காணப்படுகின்றனர்.

பார்வதி-சிலர் எல்லா நற்குணங்களும் உள்ளவராய் உள்ளனர்.நல்ல மனைவி மக்களுடன் வாழ்கின்றனர். அவர்கள் வேலைக்காரரும் அவர்கள்சொற்படி நடக்கின்றனர். செல்வத்தில் திளைக்கின்றனர். நோயின்றி மகிழ்ச்சியு டன் விளங்குகின்றனர். ஒரு நாளும் அவர்களுக்குத் துன்பம் இல்லையே ஏன்?

ஈஸ்வரன்-முற்பிறவியில் யார் கல்வி அறிவில் சிறந்தவர்களாக, ஒழுக்க சீலராக, தானம் செய்பவர்களாகத் திகழ்கின்றனரோ, யார் கொல்லாமையும் வாய்மையையும் போற்றினரோ, யார் நல்ல நோன்புகளை மேற்கொண்டி... பிறர் துன்பத்தைத் தன் துன்பம் போல் கருதினரோ அவர்கள் இப்பிறவியில் எல்லா நன்மைகளும் பெற்று ஒரு குறையும் இன்றி வாழ்கின்றனர்.

பார்வதி-சிலர் ப... யினால் வாடி, பிணியால் துன்புற்று, வறுமைப் பிடியில் சிக்கி, யாருக்கும் ஒன்றும் தராமல் இருக்கின்றனரே.

மனைவியால் துன்பப்படுகின்றனரே.. எப்போதும் ஏதேனும் ஒரு இடையூற்றை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனரே..அது ஏன்?

ஈஸ்வரன் -அவர்கள் முற்பிறவியில் இரக்கமற்றவராக இருந்திருப்பர். கோபமும், பேராசையும் கொண்டவராக இருந்திருப்பர். ஒழுக்கம் இல்லாதவராக, பிறரைத் துன்புறுத்துபவராக, உயிர்களிடத்தில் அன்பு அற்றவராக இருந்திருப்பர். ஆதலால் இப்பிறவியில் நீ கூறியவாறு உள்ளனர்.

பார்வதி-சிலர் பிறவியிலேயே குருடராய் இருக்கின்றனர். சிலருக்குப் பிறந்த சில ஆண்டுகளுக்குப் பின் கண் கெட்டுப் போகிறது ஏன்?

ஈஸ்வரன்-யார் முற்பிறவியில் காமாந்த காரராகத் திரிந்தனரோ, யார் பிறர் மனைவியை நாடிச் சென்றனரோ அவர்கள் இப்பிறவியில் கண் பார்வைக் கெட்டுத் துன்புறுகின்றனர்.

பார்வதி- சிலர் இளம் வயதிலேயே பல்லை இழந்து, தொண்டையில் நோயுற்றுக் காது கேளாவராக ஆகி, முகம் விகாரமாகத் தோன்றுகின்றனரே! ஏன்?

ஈஸ்வரன் - பொய் பேசுதலையே முற்பிறவியில் தொழிலாகக் கொண்டவரும், சினத்துடன் விளங்கியவரும், பிறர் செவி கைப்பக் கூறியவரும், பிறர் கேட்டினைக் காதால் கேட்பவரும் ஆகியஇவர்கள் இப்பிறவியில் தொண்டை, காது, பல் முதலியவற்றில் நோய் உண்டாகத் துன்புறுகின்றனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்.
– திருநாவுக்கரசர்

வலம்புரி

TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இலங்கையில் சைவத்தைப் பாதுகாக்க இந்தியா நடவடிக்கை எடுக்கவேண்டும்

யாழ்ப்பாணம் காங்கேசன்துறையில் உள்ள சைவாலயங்களில் திருடப்பட்ட தெய்வ விக்கிரகங்கள் கொழும்பில் கைப்பற்றப்பட்டதான செய்திகள் வெளிவந்துள்ளன.

இச்செய்திகளின் அடிப்படையில் படைத்தரப்பின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கக்கூடிய காங்கேசன்துறையில் உள்ள சைவாலயங்களின் விக்கிரகங்கள் களவு போயுள்ளன எனும்போது,

அந்தத் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் யாராக இருப்பர் என்பது பற்றி பொலிஸ் தரப்பு பல கோணங்களில் புலனாய்வு செய்திருக்க வேண்டும்.

ஆனால் சாட்டுப்போக்குக்கு ஒருவரைக் கைது செய்து அவரை அடைத்துவிட்டு, காணாமல்போன விக்கிரகங்கள் தொடர்பில் ஒருவர் கைது என்றவாறான தகவலினூடு சம்பந்தப்பட்ட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொலிஸார் தமது பொறுப்பைத் தட்டிக்கழிக்க முற்பட்டுள்ளமை தெரியவருகின்றது.

இந்நிலையில் காங்கேசன்துறைப் பகுதியில் களவுபோன தெய்வவிக்கிரகங்கள் கொழும்பில் கைப்பற்றப்பட்டுள்ளதான செய்திகள் வெளிவந்துள்ளன எனும்போது, மேற்படி தெய்வவிக்கிரகங்கள் களவு போனதன் பின்னணியில் யார் இருந்திருக்க முடியும் என்பதை ஊகிப்பது கடினமன்று.

இங்குதான் சிவபூமியாகிய ஈழத்தில் சைவாலயங்களின் பாதுகாப்பு எவ்வாறாக உள்ளதென்பது புரிதற்குரியது.

யுத்தகாலத்தில் எத்தனையோ சைவாலயங்கள் அழிக்கப்பட்டன.

தவிர, அந்த ஆலயங்களில் இருந்த வரலாற்றுத் தொன்மைவாய்ந்த விக்கிரகங்கள் கடத்தப்பட்டு அவற்றின் அடையாளமே தெரியாமல் ஆக்கப்பட்டன.

இதற்கு மேலாக, உயர்பாதுகாப்பு வலயங்களுக்குள் அகப்பட்ட சைவாலயங்கள் முற்றுமுழுதாகச் சேதமாக்கப்பட்டதுடன் அங்குள்ள விக்கிரகங்களுக்கும் என்ன நடந்ததென்பது தெரியாமல் உள்ளது.

நிலைமை இதுவாக இருக்கையில், படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள சைவாலயங்களில் எஞ்சியிருந்த தெய்வவிக்கிரகங்களும் காணாமல்போவதும் அவை தென்பகுதியில் கைப்பற்றப்பட்டிருப்பதும் இலங்கையில் சைவாலயங்களுக்கு என்ன நடக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளப் போதுமானது.

சிவபூமி என்று போற்றப்படும் நம் ஈழத்தமிழ் மண்ணில், திட்டமிட்டு சைவாலயங்கள் அழிக்கப்படுகின்ற சம்பவங்கள் இந்தியாவுக்கு இன்னமும் தெரியவில்லையா? அல்லது அத்தகைய சம்பவங்களை மத்திய அரசுக்கு அறிவிக்கின்ற பணியை இந்தியத் தூதுவராலயங்கள் செய்யவில்லையா? என்ற கேள்வி எழுகிறது.

எதுஎவ்வாறாயினும் ஈழத்தில் நடைபெறுகின்ற சைவ சமய அழிப்புத் தொடர்பில் இந்திய மத்திய அரசு உடனடியாகக் குரல் கொடுக்க வேண்டும். இதைச் செய்யாதவரை நிலைமை படுமோசமாக இருக்கும் என்பது நிறுதிட்டமான உண்மை.

## மின்சாரக் கம்பத்துடன் மோதி கார் விபத்து;
### வவுனியாவில் ஒருவர் காயம்

(குருமன்காடு)

வவுனியா, மூன்று முறிப்பு பகுதியில் மின்சாரக் கம்பத்துடன் மோதி கார் ஒன்று விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று பிற்பகல் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

அனுராதபுரம் பகுதியில் இருந்து கிளிநொச்சி நோக்கிச் சென்ற கார் ஒன்று வவுனியா, மூன்று முறிப்பு பகுதியில் பயணித்துக் கொண்டிருந்தபோது கட்டுப்பாட்டையிழந்து வீதி ஓரத்தில் காணப்பட்ட மின்சாரக் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. இதில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

குறித்த விபத்துக் காரணமாக மின்சாரக் கம்பம் உடைந்து விழுந்துள்ளதுடன், அப் பகுதியில் மின்சாரத் தடையும் ஏற்பட்டுள்ளது. விபத்து குறித்து வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(ஞா-250)

## யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் சத்தியமூர்த்தி இன்று லண்டன் பயணம்

(அராலி)

யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தி இன்றைய தினம் லண்டன் பயணிக்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

லண்டனில் சில மாதங்களில் எனது பயிற்சியை முடித்தபின் மீண்டும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கடமைக்கு திரும்பவுள்ளேன். இக் காலப்பகுதிக்கு தற்காலிக பணிப்பாளர் ஒருவரை சுகாதார அமைச்சு எதிர்வரும் நாட்களில் நியமனம் செய்யும் போது அவர் கடமைகளை பொறுப்பேற்பார். போதனா வைத்தியசாலையின் சேவைகள் மிகவும் முக்கியமானதும் தனித்துவம் வாய்ந்ததும் ஆகும். ஆகவே இச் சேவை சிறப்பாக நடைபெற அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஞா-104)

## வியாபாரியின் பணத்தை பறித்துச் சென்ற கும்பல்
### நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு

(கரணவாய்)

கரணவாய் மேற்கு அந்தரான் சந்தையில் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த வியாபாரியின் 15 ஆயிரம் ரூபாய் பணம் இனந்தெரியாத நபர்களினால் கொள்ளையிடப்பட்டுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் குறித்த வியாபாரி தனது வியாபார பணத்தினை சரிபார்த்துக் கொண்டிருந்த சமயம் மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்தவர்கள் அவரின் பணத்தை வலுக்கட்டாயமாக பறித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

(ஞா-60)

## நிர்வாக சபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி கிழக்கு வாலையம்மன் சனசமூக நிலையத்திற்கான புதிய நிர்வாக சபையானது 2015ஆம் ஆண்டின் பின்னர் நேற்று மாலை 2.00 மணியளவில் யா/செங்குந்த இந்துக் கல்லூரி மைதானத்தில் நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப.மயூரனின் தலைமையில் நடைபெற்றது.

குறித்த விசேட பொதுக் கூட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் புதிய நிர்வாக சபை ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டது.

இதில் தலைவராக நிர்மலானந்தன், செயலாளராக ஸ்ரீசந்திரகுமார், பொருளாளராக சிவதர்சன், உப தலைவராக வேதகிரீஸ்வரன், உப செயலாளராக தர்சனன், நிர்வாக சபை உறுப்பினர்களாக திருமதி. இராஜபூங்குழலி, திருமதி. எட்மன்யூடித், நாகேந்திரம், செந்தூரன், கஜநீதன், நந்தகுமார் ஆகியோரும் போசகர்களாக இ.ரவீந்திரன், நா.ரகுமார் ஆகியோரும் கணக்காய்வாளராக வ.ஸ்ரீதரன் ஆகியோரின் தெரிவு செய்யப்பட்டனர். (ஞா)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**கிளிநொச்சி பிரதேசத்தில்** வன்னிவைரம், பொன்னகர் பூவரசங்குளம், விநாயகபுரம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** மறக்காறம்பளை-கணேசபுரம், சமயபுரம், ஈச்சங்குளம், கல்லறை, ஈஸ்வரிபுரம், கல்மடு கருவேப்பங்குளம், கற்குளம் (சாஸ்திரிகூழாங்குளம்), கிடாச்சூரி, கோதாண்டர் நொச்சிக்குளம், மறவங்குளம், பூம்புகார், தரணிக்குளம், இரணையிலுப்பைக்குளம், ஹபீப் நகரம், காக்கையங்குளம், கங்காணிகுளம், கீரி சுட்டான், கோவில்புளியங்குளம் (மடு), மதீனாநகர், முள்ளிக்குளம் திட்டம், பரசங்குளம் (மடு துணுக்காய் வீதி), சின்ன வலயங்கட்டு, விளாத்திக்குளம் (எம்.என்) ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### விழிப்பு நிலையின் மேன்மை



எல்லாம்வல்ல மெய்ப்பொருள் பிரம்மம் எழுச்சி பெற்று உலகமாக, உயிர்களாகப் பரிணாமத்தினால் காட்சியாகிறது. அப்படிக் காட்சியாகும் பிரம்மத்தின் தன்மையான அறிவு வெளிப்படுகிறது. சுத்த வெளியாகிய மெய்ப்பொருள், அணுவாக இயங்கி, உலகமாக, உயிர்களாக, உயிரின் அலையான அறிவாக மாறும் வரை பிரம்மத்தின் வேறு தன்மை வெளிப்படுவதற்குச் சந்தர்ப்பம் கிடையாது.

பிரம்ம வேறு, அறிவு வேறா என்றால் வேறில்லை இரண்டும் ஒன்று தான். அறிவை அறியும் ஆன்மீக வாழ்வில் ஈடுபட்டிருக்கும் நாம் "எங்கு இருக்கிறோம், எப்படி இருக்கிறோம், என்ன செய்து கொண்டிருக்கிறோம்" என்பதை உணர்ந்து எப்போதும் விழிப்பு நிலை கொண்டு பிறருக்குத் துன்பம் தராத செயல்களையே எந்தக் கணமும் செய்து கொண்டிருக்க வேண்டும்.

இந்த விழிப்புநிலை தான் மெய்ஞ்ஞானம் ஆகும். **(It is this State of constant awareness that is Wisdom).** இந்த விழிப்புநிலை வந்து விட்டதேயானால் நாம் பிறருடைய தவறுகளைக் குறையாக எண்ண மாட்டோம். அப்படிக் குறையாகவே இருந்தாலும் அதைச் சுட்டிக்காட்டாமல், "அவர்களுடைய அறிவு இவ்வளவு, அதற்கேற்ப அவர்கள் செயல்களாற்றி வருகிறார்கள். அதற்கு நாம் எந்த விதத்தில் உதவ முடியும்" என்று பார்த்து முன்வருவோம்.

இந்த உயர்ந்த நிலை வந்து விட்டதேயானால் நம்முடைய செயல்களில் குற்றம் இருக்காது நம்முடைய குற்றத்தைக் கண்டு நம்மைத் திருத்திக் கொண்டால் எப்போதும் நன்மையே செய்யும் தகைமை வந்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி II

41

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



**பழங்கால தமிழகத்தில் ஏற்றுமதியாளர்கள் பண்டப் பொதிகளின் மீது சரக்கின் பெயரையும், அளவையும் படமாக வரைந்தனுப்பினார்கள். இது கண்ணெழுத்து முறையாகும். கண்ணெழுத்து என்பது அடையாள எழுத்து அல்லது குறியீட்டெழுத்து எனலாம்.**

குறிப்பு- வேறுயாரும் அறியாமல் குறிப்பிட்ட நபர் மட்டுமே படிக்கக் கூடிய வகையில் அமைந்த எழுத்துகள் கரந்தெழுத்துகள் என அழைக்கப்பட்டதை இலக்கியங்கள் காட்டுகின்றன.


**வேறுயாரும் அறியாமல் குறிப்பிட்ட நபர் மட்டுமே படிகக் கூடிய வகையில் அமைந்த எழுத்துகள் கரந் தெழுத்துகள் என அழைக் கப்பட்டதை இலக்கியங்கள் காட்டுகின்றன.**

### சிந்துவெளிஎழுத்து- தமிழ் எழுத்து

கி.மு. 5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்து வெளித் திராவிட மக்கள் கொண்டிருந்த மொழியே தென்இந்தியத் தமிழரும் கொண்டிருந்தனர் என்றும், இந்தியா முழுவதிலும் ஆரியர் வருகைக்கு முன்பு தமிழ் மொழி ஒரே வகையில் வளர்ச்சி அடைந்து வந்தது என்றும் கருதப்படுகிறது. சிந்துப் பிரதேசத்தில் காணப்பெற்ற சங்கேதக்குறிகளே நாளடைவில் விக்ரமக் கோல் என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டில் கண்ட வடிவம் பெற்றன.

அவையே பின்னர் பிராமி எழுத்துக்களாக மாறின. பிராமி எழுத்திலிருந்து வேறுமாறுதல்களுடன் வட மொழிக்குறிகள் ஏற்படுத்தப்பட்டன. அவற்றிலிருந்து கிரந்தம், கிரந்தத் தமிழ் வளர்ச்சியடைந்தன என்றும் கூறப்படுகிறது. சிந்து வெளியில் காணப்படும் சித்திர சங்கேத எழுத்துக்கள் தமிழ் நாட்டுப் பழைய நாணயங்களில் காணப்படுகின்றன.சித்திர சங்கேத எழுத்துக்களிலிருந்து தமிழகத்தில் எழுத்துக்கள் தனி முறையில் தோற்றமாகி வளர்ச்சிபெற்று, வட்டெழுத்து என்ற நிலையை அடைந்திருக்க வேண்டும்என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இவ்வாறு படிப்படியாக வளர்ச்சியடைந்த தமிழ் எழுத்துகள் மறைமலையடிகள், ஈ. வே. ராமசாமி போன்ற பல பெரியோர்களின் முயற்சிகளுடன் தற்போதுள்ள தோற்றம் பெற்று விளங்குகிறன எனலாம்.




### பிராமி (Brahmi) எழுத்து முறை

பிராமி என்பது ஒரு பழங்கால எழுத்துமுறையாகும். இது பிராமி குடும்பத்தை சார்ந்த எழுத்து முறைகளிலேயே பழையதும் மூலமுமான எழுத்து முறையாகும். இது பழங்காலத்தில் தெற்காசியா முழுவதும் வழக்கத்தில் இருந்தது.அசோகரின் 3ஆம் நூற்றாண்டு காலத்திய கல்வெட்டுக்கள் பிராமி எழுத்துக்களிலேயே எழுதுப்பட்டுள்ளன. இது வரையிலும் பிராமி எழுத்துக்களின் மிகப்பழைய கல்வெட்டுக்கள் இவையே என்று கருதப்பட்டு வந்தது.

ஆனால்அண்மையில் தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் கி.மு6 ஆம் நூற்றாண்டு காலத்திய கல்வெட்டுக்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. எனவே பிராமி எழுத்து முறை இன்னும் பழமை மயானவையாக இருக்கலாம் எனக்கருத்தப்படுகிறது. பிராமி எழுத்து முறையிலிருந்தே பெரும்பான்மையான தெற்காசிய, தென்-கிழக்காசிய மொழிகளின் எழுத்து முறை தோன்றின. தற்காலத்து இந்தோ-அரேபிய எண் முறையும், பிராமி எண்முறையிலிருந்தே தோன்றியது.

இந்த குடும்பத்தின் மிக முக்கியத்துவம் வாய்ந்த எழுத்து முறை தேவநாகரி ஆகும். இவ்வெழுத்து முறை இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளில் ஹிந்தி, கொங்கணி, மராத்தி, நேபாளி, நேபாள் பாஸா, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளை எழுத பயன்படுத்தப்படுகிறது. வடபிராமி எழுத்து முறைகளுள் தேவநாகரியை போல் முக்கியத்துவம் வாய்ந்த எழுத்து முறை கிழக்குநாகரி ஆகும். கிழக்கு நாகரி வங்காள மொழி, அசாமிய மொழி மற்றும் பிஷ்ணு பிரியா மணிப்பூரி ஆகிய மொழிகளை எழுத பயன் படுத்தப்படுகிறது. இதேபோல் பிற இந்திய மொழிகளான ஒரியா, குஜ்ராத்தி மொழிகளும் பிராமிய எழுத்துமுறைகளையே கொண்டுள்ளன.

### தமிழ்பிராமி

சங்ககாலத்தமிழ் எழுத்துக்கள் தமிழி, தமிழ்பிராமி, பழந்தமிழ் என்று பலவாறாக அழைக்கப் பெறுகின்றன. அவற்றுக்கான காரணம் பின்வருமாறு: வடஇந்தியபிராமி எழுத்துக்களுக்கும் சங்க காலத் தமிழகத்தில் வழக்கத்திலிருந்த எழுத்துக்களுக்கும் உருவ அளவில் ஒற்றுமை இருப்பினும் பலவேறுபாடுகள் உள்ளன. "தமிழி"யில் கூட்டெழுத்து முறைகள் இல்லை. "அ"கரத்தை நீக்குவதற்காகப் புள்ளி பயன்படுத்தப்பட்டது.


அதுபோல்தமிழ் எழுத்துக்களில் உள்ள ழ,ள,ற,ன வடிவங்கள் வட இந்தியபிராமியில் இல்லை. இந்தியாவில் பிற பகுதிகளில் கிடைக்கும் பிராமிஎழுத்துகள் பிராகிருத மொழியில் (புத்ததர்மத்தை போதிப்பனவாக) இருக்கும் பொழுது தமிழ் நாட்டில் தமிழ்மொழி மட்டுமே பயன்படுத்தப் பெற்றுள்ளது. எனவே தமிழகத்தில் கிடைக்கும் பிராமி எழுத்துக்களை வட இந்திய பிராமியிலிருந்து வேறுபடுத்தி உணர்த்தும் பொருட்டு இவை தமிழ் பிராமி அல்லது தமிழி என்று அழைக்கப்படுகிறது. இதையே நாம் சங்க காலத்தமிழ் எழுத்துக்கள் என்றும் அழைக்கிறோம்.

இந்தச் சங்ககாலத்தமிழ் (தமிழி) எழுத்துக்கள் இதுநாள் வரை சுமார் 32 இடங்களிலிருந்து 94 குகைக் கல்வெட்டுகளும் ஏறக்குறைய 25 தொல்லியல் வாழ்விடப் பகுதிகளிலிருந்து 250இற்கும் மேற்பட்ட பானைகீறல்களும் (graffiti) கண்டு பிடிக்கப் பெற்றுள்ளன. இவை தவிர முத்திரைகளிலும், மோதிரங்களிலும், காசுகளிலும் இவ்வெழுத்துக்கள் கிடைத்துள்ளன. இவ்வெழுத்துக்களிலிருந்தே3-4ஆம்நூற்றாண்டிலிருந்து வட்டெழுத்துக்களும் 7ஆம் நூற்றாண்டில் தமிழ் எழுத்துக்களும் தோற்றம்பெற்றுள்ளன.

சில தமிழ் அறிஞர்கள், பிராமி என்பது தமிழர்களது எழுத்து முறையென்றும், அதையே அசோகர் மாற்றம் செய்து பிராகிருதம் எழுதக் கூடிய எழுத்து முறையாக உருவாக்கினார் எனக்கருதுகின்றனர். மேலும் அவர்கள் பிராமியை"தமிழி" என அழைக்க வேண்டும் எனக் கூறுகின்றனர்.

தமிழ்ப் பிராமி எழுத்துக்கள் குகைப்படுக்கைகள், மட்கல ஓடுகள், முது மக்கள் தாழிகள், நாணயங்கள், முத்திரை அச்சுக்கள், மோதிரங்கள் ஆகியவற்றிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டன. தற்போதைய தென்இந்தியத்துணைக் கண்டத்திலுள்ள மாநிலங்களான தமிழ்நாடு, கேரளம் மற்றும் இலங்கை, எகிப்து, தாய்லாந்து போன்ற இடங்களிலும் தமிழ்ப்பிராமி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

படம் 1 வடபுல, தென்புல எழுத்தொழுங்கு




இதன் ஆரம்பம் (மூலம்) பற்றிப் பல கருத்துக்கள் காணப்படுகின்றன. ஆய்வுக் கட்டுரைகள் தமிழி எழுத்து முறை கி.மு.5 ஆம் நூற்றாண்டு காலத்துக்குரியன எனவும் மற்ற பிராமி எழுத்து முறைகள் கி.மு. 3ஆம் நூற்றாண்டு காலத்துக்குரியன எனவும் அதாவது அசோகருக்கு பிற்பட்ட அல்லது ஆரம்ப மௌரியப்பேரரசு (சுமார் கி.மு. 322-185) காலத்துக்குரியவை என பொதுவாகக் கருதப்படுகின்றன.

(தொடரும்)

**தமிழ் எழுத்துக்கள், சிந்துப்பிரதேசத்தில் காணப் பெற்ற சங்கேதக் குறிகளே நாளடைவில் தமிழகத்தில் தனிமுறையில் தோற்றமாகி வளர்ச்சி பெற்று, வட்டெழுத்து என்ற நிலையை அடைந்திருக்க வேண்டும் என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழிலிருந்து...

அடித்துக் கொலை செய்யப்பட்டிருப்பதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணத்திலிருந்து குழு ஒன்று கௌதாரிமுனைக்கு சுற்றுலா சென்ற இடத்தில் காரைநகரில் இருந்தும் மற்றொரு குழு சுற்றுலா சென்றிருந்த நிலையில் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்டிருந்த மோதலில் குறித்த இளைஞன் அடித்துக் கொல்லப்பட்டதாக கூறப்படுகின்றது.

சம்பவத்தில் யாழ்.ஆனைக்கோட்டையைச் சேர்ந்த 22 வயதுடைய ரஞ்சன் நிரோசன் என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ள பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடைய பலரை கைது செய்துள்ளதாக தெரியவருகின்றது.(ஞா-316)

## திருமணமாகி...

பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இளம் குடும்பப் பெண் ஒருவர் தனக்குத்தானே தீ மூட்டிய நிலையில் உயிரிழந்துள்ளார்.

திருமணமாகி 11 மாதங்களே ஆன குறித்த பெண் தனது சாவிற்கு கணவனோ, வேறு யாருமோ காரணம் இல்லை. தலைவலி காரணமாகவே இம் முடிவை எடுத்தேன் எனக் கடிதம் எழுதி வைத்து விட்டு மண்ணெண்ணெய் ஊற்றி தீ மூட்டி உயிரிழந்துள்ளார்.

கச்சாய் தெற்கு கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 27 வயதான குவேனி என்ற இளம் குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் யாழ் போதனா வைத்தியசாலைக்கு மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பான மேல்திக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஞா-30)

## பட்டப்பகலில்...

வெட்டுக்காயங்களுடன் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் புதுக்குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான அப்துல் ரசாக் முஹமது ஹவ்ஸ் (வயது-51) என தெரிய வருகின்றது.

குறித்த சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய 2 சந்தேகநபர்கள் மன்னார் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளதாக தெரிய வருகின்றது.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஞா-285)

## விருந்துக்குச்...

லிருந்து இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

32 வயதுடைய கிளரின் கொல்வின் என்ற இளைஞரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் சிலருடன் இணைந்து விருந்தில் கலந்துகொண்டிருந்த குறித்த இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

குறித்த சம்பவம் கொலையா? அல்லது தற்கொலையா? என இளவாலைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா-18,33,104)

## வவுனியாவில்...

மீட்கப்பட்டுள்ளதாக செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று மாலை குளத்திற்கு சென்றவர்கள் குளத்தில் சடலம் ஒன்று இருப்பதை அவதானித்து பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்ட இளைஞர் வீட்டில் இருந்து நேற்று முன்தினம் நண்பர்களுடன் சென்ற நிலையில் வீடு திரும்பவில்லை. குறித்த இளைஞரை அவரது வீட்டார் தேடி வந்த நிலையிலேயே குளத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் வவுனியா, செட்டிகுளம், தம்பனைக்குளம் பகுதியைச் சேர்ந்த ஹரிந்து கோசல்யுஸ் வெத்தியாராச்சி (வயது-24) என்பவராவார்.

குறித்த இளைஞரின் மரணம் தொடர்பில் உறவினர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ள நிலையில், செட்டிகுளம் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஞா-250)

## மூன்று பிள்ளை...

உயிரிழந்துள்ளார்.

அச்சுவேலி மேற்கு அச்சுவேலியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயாரான சிறீஸ்குமார் ஞானசீவி (வயது-38) என்ற குடும்பப் பெண்ணே உயிரிழந்தவராவார்.

கடந்த சில நாட்களாக தலைவலியால் அவதியுற்று வந்துள்ள நிலையில் நேற்று முன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

மரணம் தொடர்பான விசாரணைகளை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ஞா)

## ஆறாத் துயரில்...

2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட ஆழிப்பேரலையால் உயிரிழந்த மக்களை நினைவுகூர்ந்து, நாடளாவிய ரீதியில் நேற்று முற்பகல் 9.25 முதல் 9.27 வரை இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

ஆழிப்பேரலை ஏற்பட்டு இன்றுடன் 17 வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் கோவிட்-19 பரவலுக்கு மத்தியில் இந்தமுறை சமய நிகழ்வுகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்படி வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் உள்ளிட்ட நாட்டின் அனைத்து பகுதிகளிலும், ஆழிப்பேரலையால் உயிரிழந்தவர்களுக்காக அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவின் சுமத்திரா தீவில் ஏற்பட்ட நில அதிர்வு காரணமாக இந்து சமுத்திரத்தில் ஏற்பட்ட ஆழிப்பேரலை ஆசிய நாடுகளில் வரலாறு காணாத அளவில் அழிவை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## நாட்டை மீட்க...

இது தொடர்பில் அவர் ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கையில்,

இராணுவ ஆட்சி எனக் கூவிக்கொண்டு ஜனநாயகக் கதைகளைக் கூறிவருவோரைச் சிறையில் அடைக்க வேண்டும்.

"இலங்கை சிங்கள பௌத்த நாடு என்பதை ஏற்றுக்கொண்டால் தமிழர்களாலும் ஆட்சியை நடத்த முடியும். நீதி அமைச்சர் பதவியிலிருந்து அலி சப்ரி உடன்டியாக நீக்கப்பட வேண்டும்" எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஞா)

## 13...

வித்துள்ளது.

இதனால் இலங்கையில் இதுவரையில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 14, 884 ஆக அதிகரித்துள்ளது. (ஞா)

## ஐ.நா...

சபைக் கூட்டத் தொடரை ஆட்சியாளர்கள் எவ்வாறு சமாளிப்பார்கள் எனத் தெரியவில்லை. உறுப்புரிமை நாடுகள் இம்முறை இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றிக் கொண்டிருக்கமாட்டார்கள். நடைமுறைக்குச் சாத்தியமான நடவடிக்கையில் அவர்கள் நேரில் களமிறங்குவார்கள்" இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட எதிரணியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. மேலும் கூறியதாவது,

"சரவதேச சமூகத்தின் ஒத்துழைப்பின்றி இலங்கை போன்ற நாடுகளால் முன்னோக்கிப் பயணிக்க முடியாது.

2015 மார்ச்சில் இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கப்படும் என்ற அச்சத்தாலேயே முன்கூட்டியே ஜனாதிபதித் தேர்தலை நடத்தி அவர் தோல்வியைச் சந்தித்தார்.

தற்போதைய அரசும் இதே வழியில் தான் பயணிக்கின்றது. ஐ.நா மனித உரிமைகள் சபையில் நாட்டுக்குத் தோல்வி ஏற்படுகின்றது. சர்வதேச ஒத்துழைப்பு இருந்தால் பல விடயங்களை சாதித்துக் கொள்ளலாம். குறிப்பாக நல்லாட்சியின் போது நாம் அதனைச் செய்தோம். மின்சாரக் கதிரை அபாயத்திலிருந்து மகிந்தவைப் பாதுகாத்தோம் என்றார். (ஞா)

## சிறுவனைக்...

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாவடியில் நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மருதனார்மடத்தைச் சேர்ந்த 16 வயதுச் சிறுவன் ஒருவன் கைத்தொலைபேசியில் உரையாடியபடி சைக்கிளில் சென்றுள்ளான்.

அப்போது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் சிறுவனைக் கத்தியால் குத்தி, கைத்தொலைபேசியை அபகரித்து தப்பிச் சென்றுள்ளனர்.

காயமடைந்த சிறுவன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ஞா)


தன நிதானய
திகதி - 2021.12.26
சீட்டிழுப்பு இலக்கம் - 658
W 21 45 61 62

கொவிசெத
சீட்டிழுப்பு திகதி 26.12.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2923
Y 23 39 46 50

மஹஜன சம்பத
திகதி 2021/12/26
சீட்டிழுப்பு இலக்கம் 4628
H 0 0 1 7 0 9

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2021/12/26
சீட்டிழுப்பு இலக்கம் 1651
01 20 35 50 53

மெகா பவர்
திகதி 26/12/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0976
G 05 04 09 46 55

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 1431
வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 26.12.2021
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,385,680
17 25 38 44 L

சனிதா
சீட்டிழுப்பு இல: 3780
வர்ணம்: இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 26.12.2021
ரூ. 2,955,400
17 25 50 63 K

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1605
நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 26.12.2021
தினம் ஞாயிறு
O 04 09 32 74
அடுத்த சுப்பர் ஜக்பொட் :- 51,400,021/=

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,373,378/=
திகதி 26.12.2021
வெற்றி வாரம் 3317
வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள் 27 30 31 39 சிம்மம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,813,838/=

R 26 32 35 59
783
26.12.2021
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 75,966,235/-
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரூ. 15 கோடியை...

பிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண இ.போ.சபையின் அதிகாரிகளும் ஊழியர்களும் தன்னிடம் தெரிவித்ததாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

குறித்த நிதியை பத்து மாத தவணையில் மீள செலுத்துவதாக இ.போ.ச தலைமையகம் தெரிவித்துள்ளதுடன் பணம் மீள செலுத்துவதனை ஆரம்பிக்கும் மாதங்கள் தொடர்பான விபரங்கள் இதுவரை குறிப்பிடப்படாமை சந்தேகத்தை ஏற்படுத்தவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஞா)

## ஒரு கிலோ...

கள் அதிகளவில் உயர்வடையும் எனவும் உணவுத் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாகவும் விவசாய நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போதைய நிலைமைக்கு தீர்வு வழங்கப்படாவிட்டால் ஒரு கிலோகிராம் அரிசி 200 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படலாம் என தெரிவித்துள்ளனர். (ஞா)

## பஸ் கட்டணங்கள்...

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே இராஜாங்க அமைச்சர் இதனைக் கூறினார்.

அத்துடன் விலை அதிகரிப்பு தொடர்பில் புதன்கிழமை தீர்மானம் எடுக்கவுள்ளதாகவும் அண்மைய எரிவாயு விலை திருத்தத்திற்கு அமைவாக கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஞா)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (9256)

**076 825 7716 (ஆகாஸ்)**

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில் கணக்கர் வளவு 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

14 அடிப் பாதையுடன்

சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து 800 மீற்றர் தூரம்

பார்வையிடும் நேரம்

காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

[ தரகர் தேவையில்லை ]

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (9255)

**077 814 7389, 077 614 7333**

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை**

அசாதாரண சூழ்நிலையிலும் அனைத்து நாடுகளுக்கும் வழமைபோல் 100% பாதுகாப்புடன் எமது சேவைகள் நடைபெறுகின்றது.

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**

இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.

தொ.பே:- 021 222 6113

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**

இல.01, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே:- 021 222 3536

**அருள்**

| | | |
|---|---|---|
| இ.போ.ச டிப்போ எதிரில், பருத்தித்துறை. | இல.01, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி. | இல.01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி. |

தொ.பே:- 076 443 1576 (C-3356)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (9250)

"INNOVATIVE IDEAS OPEN NEW WORLD"

**TECHNO WORLD**

தொழில்நுட்பக் கல்லூரி

A/L தொழில்நுட்பப் பிரிவு

இலவசக் கருத்தரங்கு - 2021

**28 AND 29 DECEMBER 2021**

தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்

ஆசிரியர்கள் ராகவன் (B.Sc) நிறோஜன் (B.Sc) முருகநிறோயன் (B.Sc) உமாகாந்தன் (BIT)

**அனுமதி இலவசம்**

அனைத்து மாணவர்களும் பங்குபெறலாம்.

இடம் : வெலிங்டன் சந்தி அருகாமை, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு : 077 017 5346 (C-3360)

**கடை வாடகைக்கு தேவை**

நல்லூர், கச்சேரி மற்றும் யாழ். நகரை அண்மித்த பகுதிகளில் கடை வாடகைக்குத் தேவை. (9744)

**075 090 6486**

**ஊர் கோழிக் குஞ்சுகள்**

1 மாத ஊர் கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு. விலை 300/= (9249)

**Rani Farm - Pannagam**

**077 332 2433**

**வேலையாட்கள் தேவை**

பண்டத்தரிப்பில் இயங்கிவரும் கோழிப் பண்ணைக்கு வேலையாட்கள் தேவை.

உணவு மற்றும் தங்குமிடம் வழங்கப்படும்.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு (9254)

**071 117 7499**

**விரைவு பொதிகள் சேவை**

**V2 TRAVELS**

**UK-975 /=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
- நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி

0768226240 DHL (C-3286)

**உடனடி வேலை வாய்ப்பு**

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்

விரைவுப் பொதிகள் சேவை

விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்: கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர்

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)

அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

சம்பளம் - 20'000/-

பயிற்சியின்போது - 15'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0777-068-777

v2vacancies@gmail.com (C-3322)


## கண்ணீர் அஞ்சலி



எமது சக நன்னடத்தை உத்தியோகத்தர்
நா. செல்வேந்திரா அவர்களின்
அன்புத் தந்தையார்

**நன்னித்தம்பி நாகராஜா**

அவர்கள் இறைபதமடைந்தமையிட்டு துயர் அடைவதோடு அன்னாரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (C-3366)

நன்னடத்தை உத்தியோகத்தர்கள் சங்கம்
வட மாகாணம்

## கூறுவிலை கோரல்

**பூநகரி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்**

**வாடியடி அரிசி ஆலையின் நெல் பரவும் தளம் புனரமைத்தலுக்கான கூறுவிலை கோரப்படுகின்றது.**

- குறித்த வேலைக்கான மூலப்பொருட்கள், கூலி உட்பட கூறுவிலை கேள்வியில் குறிப்பிடப்படவேண்டும்.
- குறித்த வேலை விபரம் தொடர்பான கூறுவிலை கோரலுக்கான விண்ணப்பப் படிவம் அலுவலக நேரத்தில் ரூபாய் 500.00 செலுத்தி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- குறித்த கூறுவிலையை நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
- விண்ணப்ப முடிவுத் திகதி 15.01.2022 நண்பகல் 12.00 மணி வரை. அன்றைய தினம் 12.30 மணிக்கு கேள்வி திறக்கப்படும்.
- மேலதிக விபரங்கள் சங்க அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரது கேள்விக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

தா. அரியரத்தினம்
தலைவர்,
பூநகரி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்,
பூநகரி. (C-3364)

## பகிரங்க ஏல விற்பனை

**பூநகரி ப.நோ.கூ. சங்கத்தின் சேவையிலுள்ள கீழ்வரும் வாகனங்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.**

**வாகனங்கள் LG 8424, LG 8428 (வட்டா)**

- வாகனங்களை அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.
- பகிரங்க ஏல விற்பனையில் வாகனத்தின் அடிமட்ட விலை சங்கத்தால் தீர்மானிக்கப்படும்.

ஏல விற்பனை நடைபெறும் இடம் - நாகதேவன் துறை வீதி, பூநகரி ப.நோ.கூ. சங்கம்

காலம் - 21.01.2022

ஏல விற்பனையில் பங்குபற்றுபவர்கள் மீளப்பெறும் வைப்புப் பணமாக ரூபாய் 10,000.00 வைப்புச் செய்தல் வேண்டும்.

தா. அரியரத்தினம்,
பூநகரி ப.நோ.கூ. சங்கம்,
பூநகரி. (C-3365)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.